இஷ்டமாக மௌனத்தைக் கிரஹித்து அதன்பிறகு மந்திரங்களைச் சோதித்தல் வேண்டும். மந்திரங்கட்கு மாலைமுதலிய ஐஸ்வர்ய சமூஹங்கள் சொல்லப்பட்டன. அம்மாலை முதலிய மந்திரஜாலங்களை யெழுப்புவதாகிய சிவாஞ்ஞா சத்தியானது ஓம் நமஹ என்று ஸ்மரிக்கப்பட்டது. ஓங்காரமுதல் நமோந்தமாகவிருக்கிற மந்திரங்களை மூலமைக்கும் படித்தல்வேண்டும். புஷ்பாஞ்சலி செய்து சிவாபிப் பிராயமாகப் பாவிக்கப் பட்டவராயும் மும்மாத்திரை முதலிய க்ரமத்திலேயே எவ்வளவு பர்யந்தம் நாதத்தின் முடிவையடைவானை அதுவரைப் படித்தல்வேண்டும்.

இவ்வாறு சுத்தமாகிய தத்துவத்தைச் சேவிப்பதால் மந்திரசுத்தி யாகும்,

பஞ்ச கவ்வியம்.

பிறகு பஞ்சகவ்வியத்தைச் சேர்க்கவேண்டும். இந்தப் பிரகரணத்தில் அதன்செய்கை சொல்லப்படுகிறது.

* சொல்லப்படுகிற தென்பதனால் இதனை உத்கர காமிகத்திலுட் கூறியிருப்பதனைக் கர்க்கர்ப்பாது கூலமாயிவ்விடம் கூறப்படுகின்ற தென்பது கருத்து. இப்படலம்-கூறு-வதஸ்லோக முதல்-உசுள - வது ஸ்லோகவரை வருவித் தறைத்திருப்பதைக் கண்டுகொள்க.

மண்டபத்தின் மங்களகரமாகிய விடத்தில் ஒன்பதாயாகச் செய்யப்பட்ட கூத்திரத்தில் ஐந்து பாத்திரங்களை ஐந்து தத்வங்களாற் செய்யப்பட்ட ந்யாசத்தில் வைத்தல்வேண்டும். ஆசாரியர் புருஷகாலத்தில் சாதாக்ய தத்வத்திலிருக்கிற சிவத்தில் நன்முக ஸ்தாபிக்கப் பட்டதாயும் மிகவுங் குளிர்ச்சியாயு நல்லநிற முள்ளதாயு மமிருத ஸ்வரூபமாயு மிருக்கிற கும்ப ரத்நோதகத்தைச் சங்கற்பித்துப் பால்தயிர் நெய்பசுவின் சாணம் கோமூத்திரம் வைத்தல்வேண்டும்.

பிறகு ஸ்தாபித்தல்.

ஈஸாநாதி மந்திரங்களால் ஒன் றிரண்டு மூன்று நான் கைந்துமுறை மந்திரிக்கப்பட்டதாயு மிருக்கிற தருப்பைஜலத்தை ஆறு முறை அம்ருதீகரித்துப் பூஜீத்துச் சிவமந்திரத்தால அவ்வாறையும் ஒன்முகச் சேர்த்தல் வேண்டும்.

பால் தயிர் நெய் தேன் சர்க்கரை சந்தன தீர்த்தமாகிய வற்றைப் பரிசுத்த காரமான இருதய முதலான மந்திரங்களால் ஸ்நாநத்திற்காக அபிமந்திரித்தல் வேண்டும்.

கூறிப்போந்த பஞ்சகவ்யத்தை நித்யமாயாவது விசேஷ காலத்திலாவது இஷ்டசித்தியைக் குறிக்கும காலத்திலாவது சிவபிரானுக் கபிஷேகஞ் செய்வித்தல் வேண்டும்.

ஸ்நபநம்.

இனி விதிப்படி ஸ்நபநகலசஞ் செய்யத்தக்கது. அதுவு மநேகவிதமாகும். அஸ்த்ரமந்திரத்தாற் பூமியைச் சோதித்தல் வேண்டும். வாமதேவத்தால் மெழுகுதல்வேண்டும். அகோரத்தால் எப்படித் தாலப்ரமாணமோ அப்படி சூத்ரந்யாசம் செய்யத்தக்கது. மூன்று தாலப்பிரமாணம் கர்ணிகையளவு எவற்றினும சாதாரணமாகச் சொல்லப்பட்டது.

எப்பொழுது திக்கில் நான்கிதழை யுடைத்தாயிருக்கிற ஐந்து கலசங்களை ஸ்தாபிப்ப துண்டாகுமோ அப்பொழுது நான்கு பக்கத்தினு மொன்றைச் சூழப்பட்ட விதிக்குகளிலும் ஒன்பது கலச ஸ்தாநங்க ளுண்டாகும்.

ஓ! அந்தணர்களே! பிறகு இருபத்தைந்து கணக்குள்ளது. அதற்கு நான்கு பக்கத்திலும் சூழப்பட்டது நாற்பத்தொன்பது. பின் நூற்றெட்டு.

இருபத்தைந்து கணக்குள்ளதாய் மத்யபாகத்திலிருக்கிற கலசங்களை விட்டு நான்கு பக்கத்திலும் இரண்டு மார்க்கத்தோடாவது ஓர் மார்க்கத்தோடாவது கூடியிருத்தல்வேண்டும். வெளியி லிரண்டாவரண மிருத்தல்வேண்டும். எட்டு த்வாரங்களோடு கூடினதாயு மிருத்தல்வேண்டும். மத்தியி லிருக்கிற கலசங்கள் பதினைந்து சங்யை யுள்ளதாகவும் விதிக்கில் ஸ்தாபிக்கப் பட்ட கலசங்கள் ஒன்பதாகவு மிருத்தல்வேண்டும். பதினைந்து சங்யையுள்ள மத்யபாகத்தில் அதன் மத்தியிலிருக்கிற மூன்றையும் விடல்வேண்டும். இது நூற்றெட்டின் விவரமல்லவா? ஆயிரமாயின் ஒன்ப தந்திக மாகும்.

ஒன்றை மூழமகலமாவது அவ்வாறன்றி ஒரு அஸ்தப்பிரமாண முள்ளதாயாவ திருக்கிற இரண்டுநூல் கிழக்கு மேற்காகவும் தெற்கு வடக்காகவும் சுற்றல்வேண்டும். வெளிபிற் சுற்றினால் பதினைந்து கணக்கிடப்பட்ட ஆவரணம் இருத்தல்வேண்டும். மார்க்கத்துக் குள்ளிருப்பதை ஆவாகனம் செய்யச் சாத்திரத்தி லேற்பாடானது சொல்லப்பட்டது. நடுவிலிருக்கிற வ்யூகத்திற்கு நான்கு பக்கத்திலும் நான்கு குண்டமாவது எட்டு குண்டமாவது நாற்பது வ்யூகத்திற்கு வேருக இருபத்தைந்து குண்டமாவது ஆகும்.

ஆசாரியர் ஆயிரத்தெட்டுக் கலசங்களைப் பார்க்கினும் வெளியிலிருக்கிற ஆவரணத்தை விடவேண்டும். அந்தக்கலச ஸ்தாநங்களில் ஆக்நேயமுதலான மூலைகளிலிருக்கிற நான்கு வ்யூகத்தைச் செய்யவேண்டும். மற்ற வையாவும் முன்கூறியதற்குச் சமமாகும். பிறகு ஐம்பது நூற்றெட்டு ஆகும். எட்டு சங்கியையோடு கூடினதாயும் மத்திமபக்ஷமாயு மிருக்கிற இருநூறு கலசங்களில் எட்டு குண்டமாகும். ஆவரணத்திற்கு வெளியில் பதினறு கணக்கிடப்பட்ட கலசங்களைத் திக்கு விதிக்குகளையடைந்திருக்கும்படி கிரஹித்தல் வேண்டும். அவ்

வாறுபின் அவ்வெட்டிவ்யூகமானது முற்கூறிய சங்கியையோடு கூடினதாகும்.

தற்புருஷ மந்திரத்தால் நாலுபடியளவு ஜலம் மேடையானது பூரிக்கவேண்டும். அதன்பிறகு அதற் கிரட்டிப்பா யாரம்பித்து ஒன்றை விருத்திசெய்து பத்துபங்கு வரையிலும் சிவகும்பத்தில் அளவாகும். கலசத்தில் நிறைப்பதில் நான்கு மூன்றிரண்டொன்று சங்கையைகள் செய்யப்பட்ட படியளவு சம்மதிக்கப் பட்டதாக ஆகும்.

கலசத்தில் மூன்றிரண்டொரு சூத்திரங்களால் முறையாகச் சுற்றல்வேண்டும்.

லவங்கம் பச்சைகற்பூரம் ஆலம்பழம் விலாமிச்சவேர் இந்த ஜாதிகளோடுகூடின சிவதீர்த்தம் சிவமந்திரத்தினால் மந்திரிக்கப் பட்டதாக ஆகவேண்டும். அந்தச் சிவதீர்த்தத்தாலேயே கும்பத்தையும் அம்மன்கலசங்களையும் நிறைத்தல் வேண்டும். பிறகு மும்மூதலாகவு முப்பத்தாறு தத்வங்களின் முடிவாகவு மிருக்கிற தர்ப்பகூர்ச்சங்களை சாதகமந்திரத்தால் த்ரவ்யமூலமாக விந்யாசம் செய்தல்வேண்டும். சிவகும்பசத்தி கும்பங்களிரண்டையும் வஸ்திரத்தினால் சுற்றி சிவகலச சத்திகலசத்தில் நவரத்ந பஞ்சரத்ந மிவற்றை விந்யாசம் செய்யதல் வேண்டும்.

நான்கு திக்குகளிலும் பாத்ய மாசமனம் அர்க்யம் பஞ்சகவ்யம் இவை இருத்தல் வேண்டும். பிறகு விதிக்குகளில் தர்ப்போதகம் பால் தயிர் நெய் இவைகளிருத்தல் வேண்டும்.

இரண்டாவது ஸ்தாபநம் சொல்லப் பட்டது.

நித்தியம்,

இனி மூனறுவது சொல்லப் படுகிறது.

தேன் பொரி கேழ்வரகுமா பொரிமா மஞ்சள் பூலாக்கிரை கருப்பங்கிளை வாழை எள் வெண்கடுகு பலாமரத்தின் வேர் தேங்காய் இரண்டுநாவல் கொடிமாதுளை யென்பவைக ளிருத்தல் வேண்டும்.

இருபத்தைந்து கலசத்தினடுவில் உள்ளாவரணத்தைத் தள்ளவேண்டும்; அவ்வாறுசெய்தால் இவ்விடத்திற் கலசங்கள் பதினாறும்.

நான்கு திக்குகளிலும் விதிக்குகளிலும் பாத்ய முதலான அஷ்டகமானது சொல்லப் பட்டது. நடுவில் தேன்முதலெட்டு சங்கியை சொல்லப் பட்டது.

முன சொல்லப்பட்ட இம் மூன்று கலசவிதாநம் நித்ய கர்மத்தில் விசேஷமாகச் சொல்லப்பட்டது. இந்நித்யகர்மத்தில் இருபத்தைந்து கணக்குள்ள கலசம் ப்ரசம்சை செய்யப்பட்டது. மிகவு மூத்தமமாகிய பூஜைகள் தூற்றெட்டு கலசத்தை முடிவாக வுடையன.

நைமித்திகம்.

நைமித்திக மானது அதற்குமேல் மூன்சொல்லப் பட்ட வைகளென்று ப்ரசித்தமாகச் சொல்லப் பட்டது.

இந்தச் சமஸ்த திரவியங்களையு மூலமந்திரத்தினால் விந்யாசம் செய்தல் வேண்டும்.

முக்யமான விதைகளை மடக்குகளாலாவது தளிர்களாலாவது மறைத்து இருதய மந்திரத்தால் நானவிதங்களான வஸ்திரங்களைக் கொடுத்து ஆசனமந்திரத்தைக் கற்பித்து இந்தக்கும்பத்தில் மூர்த்தியை ஸ்மரிக்கவேண்டும். பஞ்சபிரம்ம மந்திரங்களால் சகளீகரித்து அதன்கலைகளை அவ்விடத்தில் விந்யாசம் செய்தல்வேண்டும்.

குருவானவர் ந்யாசம் செய்யப்பட்ட வித்யாதத்வசரீரத்தை யுடைத்தான அந்தரூபத்தைத் தியானித்துச் சிவத்தை ந்யாசம் செய்தல் வேண்டும். கலசஸ்தாபந முதலானதைச் செய்து இருதய மந்திரத்தால் பாத்ய முதலாகியதைக் கொடுத்து சந்தனபுஷ்பங்களையும் தூப தீப அர்க்கியத்தையும் சமர்ப்பித்து இலிங்க முத்திரையைக் காண்பித்து கவசமந்திரத்தால்அவகுண்டனம் செய்தல் வேண்டும்.

ப்ராம்மண ச்ரேஷ்டர்களே! வர்த்தநீ கலசத்தில் கௌரியைப் பூஜித்து யோநிமுத்ரையைக் காண்பித்து பஞ்சப்பிரம மந்திரங்களை சாதாரண மந்திரத்தை விட்டு ஐந்துமுறை ஸ்மரித்தல்வேண்டும்.

வெளியில் வித்யேஸ்வரர்கள் ஏற்பாடு செய்யப் பட்டனர். திக்குகளில் ஒன்பது மூர்த்தீசுவரர்கள் ஏற்பாடு செய்யப்பட்டனர். இருபத்தைந்து கணக்குள்ள மத்தியில் வாமதேவர் முதலானவர்கள் ஸ்மரிக்கப்பட்டனர். வெளியில் அங்குஷ்டர் முதலான எட்டு கணேசுரர்கள். அவ்வாறே குரோதர்முதலான எண்மர், சதருத்ரர் முதலானவர்கள்.

ஸ்நபநகலச விஷயத்தில் நாற்பத்திநான்கு தேவதைகள் சம்மதிக்கப்பட்டனர். நடுவில் வித்யேசுரர்கள் பூஜிக்கத்தக்கவர்கள். வெளியில் சதருத்ரர்கள் சம்மதிக்கப்பட்டனர். நடுப்பாகத்தில் வித்யேசுரர்களாகிய தேவர்கள் பூஜிக்கத்தக்கவர்கள். அதற்கப்பால் சிவமேயல்லவா; அவரும் ஸஹஸ்ர நாமங்களால் அதனினும் விசேஷமாகப் படிக்கப் படுவர்.

ப்ரணவ முன்பாகவும் கூடஹாரத்துடன் கூடினதாகவும் நான்காவது வேற்றுமையை யடைந்த ஸ்வாஹா நமஹ என்னு மந்தங்களாயுள்ள சிவநாமத்தை மாத்திரம் படித்துச் சிவபிரானைப் பூஜித்தல்வேண்டும்.

இலிங்கசுத்தி.

இலிங்க சுத்தியான தெவ்வாறு சாத்திரம் விதிக்கப்படுகிறதோ அவ்வாறே முறையாக அடையப்படுகிறது.

சிவலிங்கம் வியக்தம் அவ்யக்தம் வியக்தாவியக்தம் என மூவிதமாகச் சொல்லப்பட்டது. ஸ்வயம்பு தேவம் பாணம் ஆருஷம் மானுஷம் என அநேகவிதங்களாக இலிங்கங்கள் சொல்லப் படுகின்றன. ஸ்திரம் சரம் மூவிதமண்டல லிங்கங்களாவது, சித்ரபடம் சுவரிலெழுதும் சித்திரம் மந்திர பிடம் அக்நி ஜலம் ஆசாரியர் மரமுதலியவும், அவவாறன்றி வித்யாதத்வபிடம் அல்லது பெரும்பாலும் தானே தோற்றிய (சித்தமாகவிருக்கிற) சிவலிங்கம் அல்லது ரத்நம் மற்றும் வேறுவிதாயகமாய் காரணாகம முதலியவற்றிற் கூறப்பட்ட விசேஷமாகிய மணல் தண்டிலம் அன்னம் ஆற்றின் மண் பசுவின்சாண முதலிய சமஸ்தமும் சிவபூஜைக்காகப் பூஜாக்கிரியை கட்குச் சித்தமானபடி செய்தல் வேண்டும்.

சாமான்யமாகிய அர்க்கியத்தைக் கிரஹித்துக்கொண்டு த்வாரத்திற்குமுன் இடபத்தைப் பூஜித்தல் வேண்டும். த்வாரத்தில் எழுகுலிங்கத்தைப் பூஜித்தல் வே

ண்டும், பரிவாரத்திற் சிலாலிங்கத்தைப் பூஜித்தல்வேண்டும். ஏழு வர்க்கத்தில் நாலாவதாயும் ஏழு ஸ்வரங்களாற் பூஷிக்கப்பட்டதாயும் விந்துநாதங்களோடு கூடினதாயும் முதலிற் ப்ரணவமுன்பாக வ்ருஷபாய நமஹ என்று அதன்முடிவில் பிரம மந்திர அங்க மந்திரங்களைக் கற்பித்தல் வேண்டும். த்வாரத்தை அஸ்த்ரமந்திரத்தாற் ப்ரோக்ஷித்து த்வாரபாலகர்களை விக்நேச்வர சரஸ்வதி நந்தி கங்கை யமுனை இவர்களை முறையாகப் பூஜித்தல்வேண்டும்.

கும்பத்திற்கு மேல் கணபதியையும் ஸரஸ்வதியையும் கங்கையோடு கூடின நந்தியையும் மஹாகாளரோடு யமுனையையும் வலது பக்கத்திலும் இடது பக்கத்திலும் பூஜித்தல் வேண்டும்.

விமலரையும் சுபாஹுவையும் மேடைகளில் முறையாகப் பூஜித்தல்வேண்டும்.

இவர்கள் இருதய மந்திர முதலானவைகளாலும் நமோந்தங்களாலும் க்ரமப்படி பூஜிக்கத் தக்கவர்கள். அத்திமரத்தால் ஞானவாளைவைத்து உருவம் அவயவத்தின் பிரிவு இவற்றின் பாவனையாலும் சந்தன முதலானவைகளாலும் முறையாக மூவித விக்நங்களைப் போக்கல் வேண்டும். த்வாரபூஜையின் முடிவிலும் அபிஷேக முடிவிலும் நைவேத்யத்திலும் சந்தியின்முடிவிலும் சிறந்ததாகிய திரையிடல் வேண்டும்.

வாஸ்தோஷ்பதே ப்ரம்மணஹ என்று ப்ரம்மாவைப் பூஜித்து முற்காலத்திற் செய்திருக்கப் பட்டதாகிய லிங்கத்தினுவை யடைந்திருக்கிற பூஜையை காயத்திரியாற் பூஜித்து சாமான்யார்க்யத்தைக் கொடுத்தல் வேண்டும். பஞ்சப்ரம்ம மந்திரங்களை யுச்சரித்து லிங்க பூஜையை நீங்கி இருதய மந்திரத்தினால் ஈசாந்யதிக்கில் பிடிகை முதலானவைகளால் சாத்திரப்படி சண்டேசாய நமஹ என்று பிண்டிகையை வைத்து அஸ்திரப்பிரயோகத்தாற் சோதித்து வலது கையாற் சிவலிங்கத்தைச் சோதித்தல்வேண்டும். அஸ்திர மந்திரத்தாலே பேரசிவலிங்கத்தை வேதிகையுடன் சோதித்துப் பிறகு சாமான்யார்க்ய ஜலத்தாலபிஷேகஞ்செய்தல்வேண்டும்.

ஆசனம்.

| | | |
|---|---|---|
| ஆவாஹனத்திற்கு | ஆசநம் | பத்மம் |
| ஸ்நாநத்திற்கு | | அநந்தம் |
| அர்ச்சநத்தில் | | விமலம் |
| நைவேத்யத்தில் | | யோகம் |

என்னு மாசநங்களையறிந் துபயோகித்தல் வேண்டும். வஸ்த்ரமுதலிய வேறு கர்மங்களை சிம்ஹாசநத்திற் செய்தல்வேண்டும்.

இவ்வாறு ஆன்மா இடம் த்ரவ்யம் மந்த்ரம் லிங்கம் இவைகளின் சுத்தியைச்செய்து பிறகு சிவார்ச்சனம்செய்யத்தக்கது. பஞ்சசுத்தியின்றிச் சிவபூஜை செய்வதற்கு விதி விதிக்கப்பட வில்லை.

லிங்கபீடம்.

பீடத்திற்கு வாயுதிக்கில் கணேசரைச் சந்தனபுஷ்பாதிகளால் பூஜித்தல் வேண்டும். ஈசாந்யதிக்கில் குரு பரம்பரையை இருதய மந்திரத்தால் பூஜித்தல் வேண்டும். ஆசநம் ஆசநதேவதையிவைகளின் சத்தியை யறிந்து பூஜையைத் தொடங்குதல் வேண்டும்.

ஆசனம் ஜீவ தேகபேதம் என இருவகைப்படும் சுத்தவித்யா த்தவத்தின் முடிவில் அநந்தாதி ஆசனம் சொல்லப்பட்டது. மஹாமாயையின் முடிவில் திவ்ய தேகத்தை த்யாநித்தல் வேண்டும். இந்தத் தேகத்தில் இவ்வாறு தேக ஜீவ சிவமென்னு மூவித கற்பனையால் ஜீவனே சிவமாகும். யாதொன்று லேசாய் வியாபரிக்குமோ அது அந்தத் தேகத்திற் கூடியிருப்பதாயும் வியாபரிக்கப் படுமல்லவா.

பார்க்கப்படுகிற வஸ்துக்கள் வாயுவால் த்ருணம்போல் யாதொரு சத்தியால் தரிக்கப்படுகிறதோ அன்றியும் உண்டாக்கப் படுகிறதோ, சந்த்ர பிரணம்போல் நிர்மலமாயும் சாந்தமாயும் நான்கு முகங்களையும் நான்கு புஜங்களையு முடையதாயும் பால்சமுத்திரத்திற் கொப்பான உருவத்தையுடையதாயும் கற்பிக்கப்பட்ட இருதய மந்திரத்தை யடைந்ததாயு மிருக்கிற அந்த ஆதாரசத்தி முன்னமே சூர்மசிலாசநத்தில் ந்யாசம் செய்யத் தக்கது.

நீல வர்ணத்தோடு சமமான வர்ணத்தை யுடையவராயும் அநேக படங்களால் அலங்கரிக்கப் பட்டவராயும் இருதயத்தின்கண் கையைக் கூப்பிக் கொண்டவராயும் ஒரு முகத்தை யுடையவராயும் நான்கு புஜத்தினை யுடையவராயும் பால் சமுத்திரத் துண்டான தாமரைப் புஷ்பத்திற்குச் சமமான உருவத்தை யுடையவராயும் ஆசனமந்திர ஸ்வரூபராயு மிருள்ள ஆதிசேடரை மந்திர யோகியாகிய ஆசிரியர் இருதய மந்திரத்தால் அவ்வாதாரத்தில் ந்யாசிக்கவேண்டும்.

அவ் வாதிசேடருடைய தேஜோ பூதர்களாயும் சூக்ஷமத்தைத் தருபவர்களாயும் சிங்கத்தி னுருவம் போல் வெண்மையாயும் சூரிய பிரணம்போன்றவராயும் மஞ்சள் கறுப்பு நிறங்களோடு கூடினவர்களாயு மிருக்கிற தர்மஜ்ஞான வைராக்ய ஐச்வரியங்கள் நான்கு மூலைகளிலிருக்கிற நான்கு பாதங்களாவார்கள்.

ஒன்றுக்கொன்று பார்த்துக்கொண்டிருக்கிற அநேக சிம்ஹங்களாற் சூழப்பட்டதும் அதர்ம அஜ்ஞான அவைராக்ய அநைச்வரிய மென்று ப்ரசித்தங்களாகிய அந்த நானுவர்ண சொருபத்தையுடைய அவயவங்களைத் திக்குகளில் த்யாநித்தல் வேண்டும்.

கட்டுப்படுதல் விடுதல் என்னு மிவைகட்குக் காரணமாயும் சிவப்பு வெண்மையாயும் இச்சாசத்தி கிரியாசத்தியாயு மிருக்கிற இரண்டு சத்திகளையு மேலே த்யாநித்தல் வேண்டும்.

இலிங்கத்தினுவில் நிருதிமுதல் ஈசானதிக்குவரை மேகலைக்கு மேற்சம்பந்தித் துள்ளதாயும் தாமரைபுஷ்பாகிருதி எட்டிதழோடு கூடினதாயும் அணிமாதி சித்திகளோடு கூடினதாயும் வாமாதி அஷ்ட சத்திகளுக்கு அதிஷ்டானமாகிய தாதுக்களோடு கூடினதாயும் கர்ணிகைகளிலிருக்கிற சத்திகளோடு கூடினதாயும் இருதய மந்திரத்தால் வில்வ பத்திரங்களை விசேஷமாக அர்ச்சித்தல்வேண்டும்.

வாமை ஜ்யேஷ்டை ரௌத்ரி காளி கலவிகரணி பலவிகரணி பலப்ரமதனி சர்வபூததமனி என்னு மிச் சத்திகளைக் கிழக்குமுதல் ஈசாந்யதிக்குவரை தாதுகளிலும் இதழ்களிலும் மூலென்மனியை கர்ணிகையிலும் இருதய மந்திரத்தால் விந்யசித்தல் வேண்டும்.

வாமை முதலிய சத்திகள் சிவப்பு வர்ணங்களாகும். மனோன்மனி வெண்மை நிறம்.

சூரிய சோமாக்கினியின் மும்மண்டலங்களைத் தத்தமுருவங்களோடு இதழ்களின் முடிவாகவும் தாதுகளின் முடிவாகவும் கர்ணிகையின் முடிவாகவும் த்யானித்தல் வேண்டும்.

ப்ரம்ம விஷ்ணு ருத்ரர்கள் மூவரும் மும்மண்டலத்திற்கு மதிதேவர்கள்.

நான்குமுகமும் நல்லகண்களும் சிவந்த நிறமும் நான்கு கைகளிலும் கமண்டலம் தண்டம் ஜபமாலை தாமரைகளையுடையவராயும் ப்ரஜாபதியாயும் அமாதுஷ்ராயும் சமஸ்த பாபங்களைக் களைபவராயு மிருக்கிற ப்ரம்மாவைப் பத்ரங்களில் த்யானித்தல் வேண்டும்.

காசாம்பூ வர்ணராயும் காந்தியை யுடையவராயும் மஞ்சட் பட்டாடையைத் தரித்தவராயும் பிரகாசிக்கிற கிரீடத்தினாலும் மாணிக்கமய சலங்கைகளின் சமூஹத்தால் அலங்கரிக்கப் பட்டவராயும் சங்கு சக்ரம் கதை என்பவைகளைத் தரித்தவராயும் துளபமாலை யணிந்தவராயு முள்ள மஹாத்மாவாகிய திருமாலை த்யானித்து இதழ்களில் ஸ்தாபித்தல் வேண்டும்.

சங்கு குருக்கத்திப்பூ சந்திரன் இவைகள் போன்ற வெண்ணிற முள்ளவராயும் சந்திரசேகரராயும் சிம்ஹத்தின் தோலைத் தரித்தவராயும் திரிநேத்ராயும் கபளகண்டராயும் சூலக் கையினராயும் வ்ருஷபா ரூடராயும் பெரும்பாம்பாசராயு முள்ள ருத்ரரை த்யானித்துக் கர்ணிகையில் ஸ்தாபித்து அவ்விடத்திலேயே ஆன்மா பரமான்மா ஜீவான்மா இவர்களைத் தியானித்துப் பதிந்து சத்வ ரஜஸு தமஸு என்னு முக்குணங்களையும் காருஹபத்யம் ஆகவநீயம் தக்ஷிணாக்நி என்னு மூன்றையும் அவ்விடத்திலேயே பிரிவாக விந்யாசம் செய்தல்வேண்டும்.

இவ்வாறு சுத்தவித்யா தத்வம் வரையில் ப்ருத்விமுதலிய தத்வங்களுடைய வ்யாபகத்தைச் சிந்தித்து அந்தத் தத்வங்களின் மத்தியில் மறுபடியும் சத்தியைப் பதிதல்வேண்டும்.

இவ்வாறு ஆதிசத்தி முதல் அந்திய சத்திவரை பரமசிவத்திற்கு ஆசனம் கூறப்பட்டது. இவ்வாசனத்தில் பீடத்தின் ஸ்வரூபராகிய ஆதிசேஷர் கர்த்தாவின் ரூபமாக விருக்கின்றார். ஓ அந்தணர்களே! இவ்விடத்துச் சுருக்கமாகப் பீடத்தின் ஏற்பாடிவ்வாறு கூறப்படுகின்றது.

ஆசனத்திற்கோ வெனில் தர்ம ஞான வைராக்ய ஐஸ்வர்யங்களும் ஆதிசேஷன் சக்தி என்பதும்சேர்ந்து ஆறங்கங்களாகும்.

பரமசிவத்திற் காசனமோ வென்றால்? ஆறுவிதமாகும். பூஜையோ வென்னில்? ஹ்ருதயமாகும். இவ்வாறன்றிப் பீடத்தின் கற்பனை வேறுவிதமாகவும் கூறப்படும்.

சமஸ்த மார்க்கங்களாலும் நிர்மிக்கப்பட்ட பீடம் தர்ம ஞான வைராக்ய ஐஸ்வர்ய மென்னும் நான்கு பாகங்களையே நான்கு பாதங்களாக வுடையது. பூமியின் கீழ்நோக்காயும் அவ்வாறே காலதத்வத்தின் அந்தத்தி லிருக்கிற தத்வத்தை ஊர்த்துவ நாளமாயும் ஐம்பதஷ்டாங்களினுற்பத்தியோடு கூடின ஆவரணங்களாற் ப்ரகாசிக்கப் பட்டதாயும் மாயா தத்வ ஸ்வரூபமாயும் பெரிய முடிச்சை யுடையதாயும் சுத்தவித்யா பீடத்தைப் பெரிய தாமரைப் புஷ்பமாக வுடையதாயும் எட்டு வித்யேஸ்வர தளத்தையுடையதாயும் சத்திகளாகிற கேசரங்களாற் பிரகாசிக்கப் பட்டதாயும் இச்சாசக்தி கிரியாசக்தியாகிற சிவசக்தி அவயவங்களாலாரம்பிக்கப்பட்டதாயும் கர்ணிகா பீஜத்தால் பிரகாசிக்கப் பட்டதாயும் மாத்ருகாசூர சம்பவமாயு மிருக்கிற பீடத்தை இவ்விதமாய் த்யானித்தல் வேண்டும்.

தர்ம முதலானவைகளை நபும்ஸகாசூரங்களினாலேயே கற்பித்தல் வேண்டும்.

கற்பத்தை யுணர்ந்த ஆசிரியர் அநந்தாசனத்தைச் சிருஷ்டிக்கு முன்பாகவும் பத்மாசநத்தை யதற்கு முன்பாகவும் கர்ணிகையின் முடிவைச் சப்தஸ்வரத்தினாலும் கற்பித்தல் வேண்டும்.

ஓங்கார மாதியாகவும் அகாரமுடிவாகவும் விடப்பட்ட நபும்ஸக ஸ்வரங்களென்பதும் வாமஜ்யேஷ்டாதி சத்திகளுக்கு க்ரமமாகவும் அநுக்ரமமாகவும் ஒன்பதாகும்.

ககாரமுதல் ஹகாரம்வரை யுள்ள அக்ஷரங்களை இருபத்து நான்கு தாதுக்களாயும் மகாரமுதல் ஹகார முடிவாக ஒன்பது பீஜங்களாயும் கற்பித்தல் வேண்டும். அவ்விடத்திலேயே முன்போல் மூன்று மண்டலம் கற்பித்தல்வேண்டும். இவ்வாறு மாத்ருகையா லுண்டான பீடத்தை யுண்டாக்கிப் பூஜித்தல் வேண்டும்.

சோம சூரியாக்நி மண்டலத்தி லுண்டாகியும் அக்நி ஸ்தம்பத்திற்குச் சமானமாயும் ஈச்வர தத்வம் வரை முடிவாயு மிருக்கிற சரீரத்தை லிங்கத்தி லுபபித்தல் வேண்டும்.

இருதயத்தி னிருப்பிடமாகிய சத்தியோஜாத மந்திரத்தை மூர்த்தி மந்திரமாக உதஹரிக்கப் படுகிறது. அவ்வாறே இம் மூலமந்திரமே சாதாக்ய மந்திரமெனச் சொல்லப்படுகிறது.

லிங்கத்தின் சிரசில் வித்யா ஸ்வரூபமாகிய சதாசிவ தேவரைப் பதிதல் வேண்டும்.

சிவலிங்க ஆரோகணத்திற் பரிகத்த ஸ்தாநரூபமாயும் பிரபுவாயும் மூப்பத்தெட்டுக் கலைகளோடு கூடினதாயும் பஞ்ச ப்ரம்ம அங்க மந்திரங்களாற் செய்யப்பட்ட சரீரத்தை யுடையதாயு மிருக்கிற சதாசிவதத்துவத்தினுடைய ஸ்வரூபத்தை த்யாநநிமித்தம் இவ்விடத்திற் சொல்லப்படுகிறது.

சகல சித்திக்காகப் படமுதலானவற்றி லெழுதப்பட்டதைபாவது த்யானஞ் செய்யத் தக்கது.

சதாசிவ த்யாநம்.

ஐந்து முகங்களை யுடையவராயும் பத்து புஜதண்டங்களை யுடையவராயும் ஸ்படிகத்தி னொளிபோன்றவராயும் முக்கண்ணராயும் சாந்தராயும் சந்திரசேகரராயும் சர்ப்பத்தாற் கட்டப்பட்ட சிறந்த ஜடையை யுடையவராயும் மந்திர சிம்ஹாசநத்தில் வீற்றிருப்பவராயும் வெண்டாமரைப் புஷ்பத்தின்மே லிருப்பவராயும் ஹாரம் அரைஞாண் ஒட்டியாணம் குண்டலம் கடிக்கன் தோள்வளை கங்கணம் போர்வை வஸ்திரங்களோடு கூடினவராயும் பதினைது வயதுடையவராயும் அழகுள்ளவராயும் மிகவும் பிரசன்னராயும் புன்சிரிப்புடையவராயும்.

| வலது பக்கத்தில், | அவ்வாறே இடது பக்கத்தில் |
|---|---|
| சூலம் | அபயஸ்தம் |
| கோடாலி | பாசம் |
| வாள் | மணி |
| வஜ்ராயுதம் | சர்ப்பம் |
| அக்நி | அங்குசம் |
| இவைகளையும் | இவைகளையும் |

உடைய சதாசிவ தேவனை த்யாநித்தல் வேண்டும்.

இவ்வாறன்றி வேறு விதமாகவும் சொல்லப்படுகிறது.

| வலது பாரிசத்தில் | இடதுபாரிசத்தில் |
|---|---|
| அநுக்ரஹம் | டமருகம் |
| அபயம் | சர்ப்பம் |
| தண்டாயுதம் | ஜபமாலை |
| சக்தி | கருநெய்தல் |
| சூலம். | மாதுளம்பழம் |

இவைகளோடும்;

இச்சாஞானக் கிரியாசக்திக ளென்னுந் திருநேத்திரங்களோடு கூடினதாயுந் த்யாநித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| சந்திரன் | அவரின் ஸர்வஞ்ஞத்வஸ்வரூபம் |
| பத்துக்கைகள் | பத்துத்திக்குகள் |
| மூவிலைச்சூலம் | மூக்குணவடிவம் |
| கோடாலி | சக்தி |
| வாள் | ஈச்வரன் பராக்ரமம் |
| வஜ்ராயுதம் | பிளக்கக்கூடாததன்மை |
| சங்காரசக்தியாகிய அக்நி | மஹாமாயைபின்மே லிருக்கிற பதார்த்தங்களை விளக்குவதும் பாசங்களைப் ப[illegible] ஸ்மீகரிப்பதும் |
| கம்பீரவடிவமானசக்திபி[illegible] ன் ஸ்வரூபமாகிய நாகம் | யாவும் நியமிப்பது |
| பாசம் | ஆணவமாயை கர்மமென[illegible] மூன்று பாசங்கள் |
| மணிமாலை | மந்த்ரரூபத்தை அறிவிப்பது |
| அபயம் | சமஸ்த லோகங்களையும் காப்பாற்றும் சக்தி |
| அங்குசம் | யாதொன்று தனக்கு (அநுபவிக்கத் தக்கதோ) அடையத் தக்கதோ அதனை யுணர்த்துவது. |

இவ்வாறு பெரிய ஸ்வரூபங்களை ஆயுதங்களடைந்திருப்பதாய் நினைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| ஈசாநம் | நடு | படிகம்போன்றது |
| தத்புருஷம் | கிழக்கு | குங்குமம்போன்றது |
| அகோரம் | தெற்கு | மைபோன்றது |
| வாமதேவம் | வடக்கு | குங்குமப்பூப் போன்றது |
| சத்யோஜாதம் | மேற்கு | சந்திரகிரணம் போன்றது |

கிழக்குசிரசு — முகத்தில் சிங்காதனம் நெற்றியில் மங்களகரமான நேத்திரம் புருவமின்மை உயர்ந்தநாசி அழகிய கன்னம் சிரித்தவதி இவைகளையுடையது.

தெற்கு சிரசு — பயங்கரமான வுருவம்மேமி பள்ளமுகம் கடினமான கோரப்பற்கள் திறந்தவாய் பருத்தமூக்கு உருண்ட கண் நீட்டி உள்வாங்கு நாக்கு சர்ப்பாபரணம் கபாலமாலை அக்நிஜ்வாலை போன்ற சடைகளைச் சர்ப்பங்களாற் கட்டப்பட்ட முன்குடுமி இவைகளையுடையது.

மேற்குசிரசு — மஞ்சள்வர்ணம் தெளிவானது நல்ல நெற்றித்ரிநேத்ரம் நல்ல மூக்கு க்ரீடதாரணம் குண்டலத்தாலலங்கரிக்கப்பட்டது அழகாயும் வண்டுகளி னிருவும் போன்ற தாயும் உள்ள கேசங்கள் பொன்பரணங்கள் நெற்றியில் திலகம் கண்ணாடியிற் பிரதிபலிக்கப்பட்ட தேஜசு இவைகளையுடையது.

வடக்கு சிரசு — முன்னெற்றியிற் சுருண்டுதொங்குகிற மபிராகிற சிரோபூஷணம் அழகிய சரீரம் இவைகளையுடையது.

ஈசாந சிரசு — மேலிருக்கும் மிகவும் பயங்கரம் குண்டலங்களாலலங்கரிக்கப்பட்டது, த்ரிநேத்ரம் பாலசந்திரசேகரம் இவைகளையுடையது,

இவ்வாறு சதாசிவ தேவரின்திருமூகங்களை த்யாநித்து அவ்வுருவத்தைப் பூஜித்தல் வேண்டும்.

ஆவாஹநம்.

தேஹத்திலெவ்வாறே அவ்வாறே ஈச்வரிடத்தில் மந்த்ரந்யாசத்தைச் செய்தல்வேண்டும்.

இவ்வாறு சக்தி சரீரத்தைக் கற்பித்து அந்தச் சரீரத்தில் மூலகாரணமாயும் சிவமாயும் சாஸ்வதமாயும் சத்யமாயும் சச்சிதாநந்த சுகஸ்வரூபமாயும் சமஸ்த தத்வங்களுள்ளும் நிறைந்ததாயும் அளவிடப்படாததாயும் உவமான மற்றதாயும் வாச்ய வாசகமற்றதாயும் வாய் மனோதீத கோசரமாயும் மிகவு நிஷ்களமாயும் [illegible] வெத்தைச் சகள ஸ்வரூபத்தில் தெளிவாகத் [illegible]ல்வேண்டும்.

[illegible] ஆவாஹனத்தை முன்னே யுடைத்தாகிய மூ[illegible]ங்களாற் சேர்ப்பதால் கட்டையையடைந்த நெருப்பான தெவ்வாறு கடைதல் முதலியவற்றால் தோற்றுகின்றதோ அவ்வாறு மந்திரங்களின் மஹிமையாற் பரமசிவமானவர் பக்தியினாற் ப்ரத்யக்ஷமாய்த்தோற்றுகின்றார்.

மனமொருமித்த ஆசிரியர் புஷ்பங்களோடு கூடிய அஞ்சலியை இருதயத்தை யடைந்ததாகச் செய்து பக்தியாற் ப்ரசாத மந்திரத்தைப் படித்துக் கொண்டவராய் நிஷ்கள சிவத்தை த்யாநித்தல் வேண்டும். தன் சக்திக் கிருப்பிடமாகிய நாதத்திலும் அவ்வாறு பிந்துவிலும் க்ரமமாயு மதிக்ரமமாயும் தன்சக்தி ப்ரகாசங்களால் அதிக்ரமிக்கப் பட்டதாகக் கற்பித்து ஆவாஹநம் செய்தல்வேண்டும்.

ஓ ப்ரபுவே! சர்வஞ்ஞராகிய சிவத்திற்கு ஆவாஹித்த லெவ்வண்ணம்? ஆவாஹித்தலே ப்ரியமாகுமாகில் ஸர்வவ்யாபகத் தன்மை கெடுகிறது, என ருஷிகள் கூற; பரமசிவமானவர் கூறுகின்றனர்.

விருக்ஷத்தின் வேர் முதல் முனைவரையிலுள்ள அக்நிக்கு ஸ்பஷ்டமாக வோரிடத்திற் றோற்றுவ தெவ்வாறே அவ்வாறே வ்யாபகருக்கு ஓரிடத்திற் றோ

ற்றுவது பாதிக்கப் படமாட்டாது. எவ்வாறு தான் நி
னைந்தபடி தன் சரீரத்தின்வழி கமனம் கமனமின்மை
யாகுமோ அவ்வாறே சிவத்தின் இஷ்ட ப்ராப்தியும்
மந்திரிப்பவரின் பக்திக்குத் தக்கபடி சரீரத்தின் மார்க்
கமா யுண்டாகும். சமஸ்தமும் செய்தவராயும் சமஸ்
தமு மடைந்தவராயு முள்ள அச்சிவன் சரீரத்தோடு
கூடினவ ராயினும் கூடாதவ ராயினும் அளவிடப்
படாத சக்தியையுடையவ ராகையால் வ்யாபகராயும்
அவ்யாபகராயு மிருக்கிறார். இவ்வாறு விந்துஸ்தாநத்
தை யடைந்திருக்கிற சுர்வரைக்கையிற் புஷ்பத்தை
யடைந்தவராய் த்யாநித்தல் வேண்டும். அந்த த்யாநமூ
ம் ஜ்யோதி ஸ்வரூபமாகிய ப்ராண நாடியாற் செய்யத்
தக்கது. ஆகையாற் சிவலிங்கத்தி லிருக்கிற சிவத்தை
க்ரஹித்து ஸ்தாபனையால் சரீரத்திற் பதிதல் வேண்
டும்.

எந்தசாமர்த்தியத்தால் தன்னுடைய சிவத்தைத்
தனக்கு யஜமானத்வம் ஆக்குமோ அந்தச் சக்தியின்
ப்ரகாச பாவமான சாந்நித்யம் செய்வது அதன்முத்தி
ரையால் செய்யத்தக்கது. சாந்நித்யம் பரித்யாகஞ் செ
ய்யாவிடில் பூஜை பலமின்றித் தன்காலமுற்றும் அபல
மே செய்யும். பூஜாநிமித்யம் தடைசெய்வது ப்ரபுவினி
டத்தும் நிரோதனி சத்தியாற் செய்யப்படும்.

உலகத்திற் சுகசொரூபமான பொருள் எவ்வா
று காப்பாற்றத் தக்கதோ அவ்வாறே அந்தச்சிவத்தி
ற்கு அவகுண்டன முத்திரையால் அவகுண்டனம் செ
ய்யத்தக்கது.

எவ்வண்ண மக்நி சூரியர் முதலானவர்கள் தத்த
ம் காந்திகளால் ஸமர்த்தர்களோ அவ்வண்ணமே சம
ஸ்தத்தையுஞ் செய்தவரான சிவத்தின் ஸ்வரூபமான
அங்கமந்திரங்கள் சாமர்த்திய முடையன; ஆதலால் அ
வ்வங்கமந்திரங்கள் திரஸ்கரிக்கத் தக்கதன்று. அச்சிவ
த்திற்கு

| | |
|---|---|
| இருதயமந்திரம் | அஸ்தித்வ |
| சிரோமந்திரம் | மேற்குடி |
| சிகாமந்திரம் | ஸ்வாதீனம் |
| கவசமந்திரம் | காப்பாற்றுதல் [த்தி |
| அஸ்த்ர மந்திரம் | பாவனையைப் போக்கும்ச |
| நேத்ரமந்திரம் | சமஸ்த பொருளையும் ப்ர |
| | காசிப்பிக்கும் சததி |

இவ்வாறு அறுகுணத் தன்மை லோகநாயகராகி
ய பரமசிவத்திற்குச் சொல்லப்பட்டது. இவ்விருதய
முதலான ஆறங்கமும் தத்தம்நாம மந்திரத்தால் ப்ர
யோகிக்கத் தக்கது.

இருதயம்
சிரசு
சிகை
அங்கம்
நேத்ரம்
கரத்வயம்

இவைகளில் அங்கமந்திரங்களைப் பதிதல் செய்க.

அங்காங்கிகட்கு வேறுகிய ஞானம் அபேதஞான
மாகும்.

சிவபெருமானுக்கு அம்ருத முத்திரையால் அம்
ருதீகரித்தல் சொல்லப்பட்டது.

அச்சிவ பெருமானுக்கு அழகான அங்கத்தை வி
ருத்தி செய்கிறது உச்சாகமாகும்.

அன்னம் தனம் இவைகளை, ப்ரயோஜிக்கப் பட்
டதாகிய மஹாமுத்திரையாற் செய்தல் வேண்டும்.

ஆறத்வாகளையும் சரீரமாக வுடையவராயும் சக்
தியோடு கூடினவராயும் அநுகூலராயும் மிகுந்த ஆநந்
த சமூகத்தால் வெண்மையாகச் செய்யப்பட்ட திக்கு
களின் முகமுடையவராயு முள்ள அப்பரமசிவத்தைத்
யாநித்துப் பிறகு பாதங்களில் பாத்யத்தையும் முகங்க
ளில் ஆசமநத்தையும் கொடுத்தல் வேண்டும். அவ்வா
றே அறுகு புஷ்பம் அக்ஷதை யிவைகளாற் சிரசுகளி
ல் அர்க்யம் கொடுத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| பாத்யம் இருதயமந்திர | நமஸ்தமாகவும் |
| ஆசமநம் [த்தால் | ஸ்வதாநந்தாந்தமாகவும் |
| அர்க்யம் | ஸ்வாஹா சப்தாந்தமாகவும் |
| அறுகுபுஷ்ப முதலான | வெளஷட் முடிவாகவும் |
| வை | கொடுத்தல் வேண்டும். |

இவ்வாறு உபசாரத்துடன் பத்து சமஸ்காரங்க
ளையும் செய்து பூஜித்தல்வேண்டும்.

ஸ்நாந முதலியனவும் விபவத்தை யுடையனவும்
மிகவும் குறைவாயுள்ளனவுமான பூஜையின் உபசாரங்
கள் பூஜாவிதியில் விதிக்கப் படுகிறது. காம்யவிதியில்
மாலைமுதலிய சமஸ்தமும் முக்யமாகும்.

ஸ்நாநம் வஸ்த்ரம் சந்தநம் புஷ்பம் தூபம் தீபம்
அவிசு முகவாச கந்த தாம்பூலம் சங்கீதம் நாட்யம் பூத
ங்களின் பலியோடுகூடிய ஓமம் நித்யோச்சவம் இவை
முதலிய சமஸ்தமும் ஐஸ்வரிய மூளனுயின் சிவபிரா
னுக்குச் செய்யத்தக்கது. அற்றேல் கேவலம் பலியாவ
து செய்யத்தக்கது.

சந்தநம் புஷ்பம் தூபம் தீபம் நைவேத்யமாகிய
வைஐந்தும் பஞ்சோப சாரங்களாகும். தீபம் முடிவி
ய்யத்தக்கது.

ப்ரதிபிம்பிக்கப் பட்ட சக்தி கண்ணாடி மணிகளி
ன் சித்ர முதலானவற்றில் ப்ரோக்ஷிக்கத் தக்கது.
அவையல்லாத ஸ்நாநயோக்ய முள்ளவைகட்கு ஸ்நாந
ஞ்செய்து வைக்கத்தக்கது.

தீபம்வரை அர்ச்சனமாகவும்
நைவேத்யம்வரை பூஜையாகவும்
பலிவரை சாந்திகர்மமாகவும் சொல்லப்பட்டது.
பூஜை மூவிதமாகும்.

பூஜையில்—அதமாதமம்.

உதயமும் சாயங்கலமும் பூஜித்து அவ்வாறே ம
த்யாநகாலத்தில் பூஜையுடன் இரண்டுபடி அமுது நிவே
தனமும் செய்க.

உதய மத்யாநங்களில் ஒருதீபமும் ராத்ரியி லி
ரண்டு தீபமும். இவ்விஷயத்தி லிவ்வாறு கூறியது அ
தமாதம பக்ஷமாக அநுஷ்டிக்கப்படும்.

அதமத்தில்மத்திமம்.

உதய மத்யானங்களி னவிசு இரண் டிரண்டுபடி
யரிசியிருத்தல் வேண்டும். உதய சாயந்தரத்திற் பூஜி
த்தல் வேண்டும். மூக்காலங்களிலும் தீபங்கள் நான்கு.
சாயங்காலத்தில் அர்க்யத்தோடு பூஜித்தல் வேண்டும்.
இது அதமத்தில் மத்திமம்.

அதமம்.

பிறகு முக்காலங்களிலும்இரண்டிரண்டுபடி யரிசியும் உதயமத்யாகங்களில் தீபங்கள் நாலும் சாயரக்ஷையில் தீபங்கள் எட்டு மிருத்தல் வேண்டும். புத்திமான் முக்காலமும் வாத்யத்துடன் பூஜிக்க. இது அதமம்.

மத்திமத்தில் அதமம்

மத்யாகத்தில் ஒருமரக்கா லரிசியும் உதய சாயந்தரங்களில் இரண்டுபடியரிசியும் தீபங்கள் பன்னிரண்டும் இருத்தல்வேண்டும். இதுமத்திமத்தில் அதமம்.

ஓ அந்தணர்களே! முக்காலமும் பலியுடன் புஷ்பராகாரலிங்கத்தாற் பூஜித்தல் வேண்டும்.

மத்திமத்தில் மத்திமம்.

முக்காலத்திலும் ஒருமரக்கா லரிசியும் நாலாங்காலமாயிய அர்த்தராத்திரியில் அதிற்பாதியாகிய நாலுபடி அரிசியும் தீபமிருபத்துநாலு மாகும். இது மத்திமத்தில் மத்திமம்.

மத்திமம்.

முக்காலமும் பலியோடு கூடினதாயும் பலிக்கிரமத்திற் புஷ்பத்தோடுகூடிய அர்க்யமும் சங்ககாகளத்தோடும் வாத்யத்வனிகளோடு மிருத்தல்வேண்டும். நடுப்பகலிற் சிவமந்திரத்தோடு கூடிய நித்யஹோமமும் அநுஷ்டித்தல் வேண்டும். இது மத்திமம்.

உத்தமத்தில் அதமம்.

முக்காலங்களிலும் இரண்டுமரக்கா லரிசியும் அர்த்தராத்திரியில் ஒருமரக்கா லரிசியும் எழுபது தீபங்களு மிருத்தல் வேண்டும். முக்காலமும் பலியிடுதலும் ஓமஞ்செய்தலும் வேண்டும். ஆறுகாலமும் சமஸ்த வாத்யங்களோடு கூடினதாகக் கோஷிப்பித்தல் வேண்டும்.

உத்தமத்திற்கு ஆறுகாலமாகும். அதற்குக்கால அளவு இல்லை. எவ்விடத்தில் லதமமோ அவ்விடத்தில் முக்காலங்களிலும் இரண்டுமரக்கா லரிசியாலேயே அபிஷேசு செய்யத்தக்கது. அர்த்தராத்திரியில் ஒருமரக்கால். தீபங்கள் நூற்றெட்டு. முக்காலமும் பலியிடுதலும் ஓமஞ்செய்தலும் வேண்டும். இருபத்துநான்கு வாத்யம் சமஸ்தவாத்யங்களோடு கூடியதாயிருத்தல்வேண்டும். ரூபயௌவன சம்பத்தையுடைய வேசிகள் முப்பத்துநான்கு, அல்லது இருபத்துநான்கு, அல்லது பத்தாவதிருத்தல் வேண்டும். அவ்வக் காலங்களுக்கு வையந்த ஐந்தாசிரியர்களோடு கூடிய நிருத்தனத்தை மூன்றுகாலங்களிலு மநுஷ்டித்தல் வேண்டும். இதுஉத்தமத்தில் லதமம்.

உத்தமத்தில் மத்திமம்.

முக்காலங்களிலும் நான்குபடி அரிசு பாயசமுதலிய பண்டங்கள் இரண்டுமரக்கா லரிசியால் விதியோடு வெவ்வேறுகவும் இரண்டுமரக்கால் சுத்தான்னத்தை வெவ்வேறுகவும் சமயல்செய்வித்து நிவேதனஞ் செய்தல் வேண்டும். அர்த்தஜாமத்திற்கு இரண்டுமரக்காலாகும். தீபங்களிருநூறு. முக்காலங்களிலும் பலி ஓமம் தூபதீபம் ஐம்பது வேசிகளோடு கூடின முப்பத்துநான்கு வாத்தியம் இவைகள் கூறப்பட்டன.

காலமாவது இரண்டு ஜாமமென்று சொல்லப்பட்டது. மூன்று சுற்றுகளிலும் நிருத்தனத்தைச் செய்தல் வேண்டும். இது உத்தமத்தில் மத்திமம்.

உத்தமத்தில் உத்தமம்.

இனி உத்தமோத்தம பஞ்சத்தை யுத்தேசித்து அவிசினக்ரமம் சொல்லப்படுகிறது. பக்குவஞ் செய்யப்பட்ட பாயச முதலான பதார்த்தங்கள் வேருகப் பத்துமரக்காலாற் செய்தல் வேண்டும். அர்த்தராத்திரியில் அதிற் பாதியாகும். தீபங்கள் ஐந்நூறு. மூன்று காலமும் பலி ஓமம் ஐம்பது வாத்யங்களோடு கூடிய முப்பத்திரண்டு வேசிகளின் நிருத்தனம் செய்தல் வேண்டும். இவற்றின் காரியம் ஓர் ஜாம அளவாகும். பாயச முதலிய ஐந்து வர்ண அவிசுகள் முறையாக இரண்டு மரக்கா லரிசியிலாவது அதிற் பாதியாலாவது செய்தல்வேண்டும். இவைகளுள் ஒன் றிரண்டு மூன்றுவித மாவது சமஸ்தமு மாவது விசேஷமாகும். அவ்வாறன்றி மறுபடி யொருகாலத்திலாவது அவிசைக் கொடுத்தல் வேண்டும். சுத்தான்னம் இரட்டிப்பாகச் சொல்லப்பட்டது. இது சாதாரணம்.

இவ்வாறு ஒன்பது விதமாக உத்தமோத்தம முதல் அதமாதம மீறுகவிநிக்கப்பட்டிருக்கிறது.

அபிஷேகவிதி.

இனித் தனியே விதிக்கப்படுகிற தாவது சந்தன தீர்த்தத்தின் பரிமளத்தால் வாசித்துக்கொண்டிருக்கும் ஜலபாண்டத்தைச் சம்ஹிதா மந்திரத்தால் ஜபிக்கப்பட்டதாயும் புஷ்பங்களோடு கூடினதாயும் தூபமிடப்பட்டதாயும் சுபகரமாயும் பூஜித்துக்கையங்கிர முதலானதுகளால் பிழியப்பட்டதாயும் புதிதாயு மிருக்கின்ற எண்ணெயாலும் காய்ந்து பரிமளமுள்ள பரிசுத்தமான பசுவின் நெய்யாலும் பிடத்தோடு கூடிய சிவலிங்கத்தை அர்ச்சித்துப் பிறகு தூபமிடல் வேண்டும். மங்களகரமான மஞ்சட்பொடியோடு கூடின நெல்மாவினாலும் உளுந்த மாவினாலும் தேய்த்துப் பிறகு ஸ்நானஞ் செய்வித்தல் வேண்டும். இவ்விடத்தில் நெல்லிக்கனி முதலிய பரிமள திரவியங்களாலும் ஸ்நானஞ் செய்விக்க. பசுவினம்சமான வஜ்ரமுதலிய கற்களாலிழைக்கப்பட்ட வர்ணமுள்ள தட்டுகளில் வைக்கப்பட்ட மாவுகளாலும் கதிது உப்பு சேர்ந்த சிறிது சிவந்த சந்தன வெந்நீராலும் அபிஷேகஞ் செய்க. பால் தயிர் நெய் தேன் சர்க்கரை முதலான வைகளால் தன் சக்தி யாநுசாரமாக உழக்கிலிருந்து விருத்தி செய்யப்பட்ட உழக்கு முதல் மரக்கால் முடிவான ப்ரமாணங்களால் அபிஷேகஞ் செய்க. சர்க்கரை யில்லாவிடில் கருப்பஞ் சாறும் தேனில்லாவிடில் நெய்புமாகும். செல்வமுள்ளவன் ஜலதூப முடிவாகக் குறைவில்லாமல் அபிஷேகஞ் செய்யக்கடவன். இளநீர் ருசியுள்ள ரசவர்க்கங்கள் புஷ்ப முதலானவைகளாலும் ஸ்வர்ணத்தோடு கூடிய ஜலம் ரத்நத்தோடு கூடிய ஜலம் சந்தன ஜலம் இவைகளாலு மபிஷேகஞ் செய்க. பிறகு சூன்யசிரசாக அபிஷேகஞ் செய்யற்க.

சுட்டியிரல் பெருவிரல் சேர்த்து அஸ்த்ர மந்திரத்தால் சிரசிலிருக்கிற புஷ்பத்தை யெடுத்து அவ்வஸ்த்ர மந்திரத்தாலாயே அப்புஷ்பங்களை யவ்விடம்விட்டு வேறிடத்திற் சேர்த்தல்வேண்டும்.

புஷ்பக்குடலை அர்க்ய பாத்ய ஆசமன ஸ்நான சோதன ப்ரோக்ஷண பாத்ரங்களெழினும் ஜலம்நிரப்புதல் வேண்டும்.

தூபத்தை அபிஷேக மொவ்வொன்றினும் மற்ற தீப முதலியவைகளை அவ்வவற்றிற் குரிய சமயங்களி னு மறிந் துபயோகித்தல் வேண்டும்

த்வாரபூஜை அபிஷேகம் நிவேதநம் சந்த்யாகா லம் இவைகளின் முடிவில் திரையிட்டுப் பிறகு ஸ்தாபி க்கப்பட்ட கலசங்களால் அபிஷேகத்தைச் செய்தல் வேண்டும். முச்சந்தனம் அஷ்டபுஷ்பம் சப்தகீர்த்தம் சேர்த்தல் வேண்டும்.

ஆவாகன அர்க்ய பாத்ய ஸ்நாந தூப சந்தன நை வேத்ய விஸர்க்க மென்னும் எட்டிச் சமயங்களினும் பு ஷ்பத்தைச் சேர்ப்பித்தல் வேண்டும்.

இடது உள்ளங் கையில் தட்டை வைத்துக்கொ ண்டு சிவலிங்கத்தின் மஸ்தகத்தில் முன்வைத் திருக்கி ற புஷ்பத்தை வலதுகையால் அஸ்த்ர மந்திரத்தா லெ டுத்துப் பின்பு கைகளைப் பரிசுத்தமாகக் கழுவிப் பின் ம ந்திரத்தோடு கூடிய சங்கமுத்திரையால் நினைக்கப்பட்டி அசையாமலிருக்கிற ஜலங்களாற் பரமசிவத்தின் சிரசி ல் ஸ்நாநம் செய்வித்தல் வேண்டும்.

கையை மேலே சுற்றக்கூடாது. முத்திரையைக் கீழே கட்டக்கூடாது. தளும்பிய ஜலங்களால்அந்தத் தி ரவியங்களை நனைத்தல் கூடாது.

ஜயசத்தத்தோடு கூடிய சிவகும்பத்தையும் அம் மன் கலசத்தையும் எடுத்து ஸ்வாமியின் முன் யந்த்ரி கையில் வைத்து விந்யாசம் செய்தல் வேண்டும்.

சந்தனம் புஷ்பம் தூபம் தீபம் அர்க்யம் என் பவைகளைச் சமர்ப்பித்து அவ்விதாநத்தை ஆசிரியர் வ லது கையினல் வாங்கிச் சிவமந்திரத்தை நினைந்தவரா ய்ப் புஷ்பத்தோடுகூடிய கூர்ஜத்தை இரண்டு கலசங்க ளுடன் பிடித்துக்கொண்டு தத்வத்தில் மனதைவைத்த வராய்ச் சிவலிங்கத்தின் சிரசில் மந்திரத்தை ந்யாசம் செய்தல் வேண்டும்.

பார்வதியைப் பரமசிவத்திற் கிடது பாகத்தில் ஸ்தாபித்தல் வேண்டும்.

சிவ மந்திரத்தை ஸ்மரித்துக்கொண்டு சிவ கும்ப ஜலத்தால் சிவத்தை ஸ்நாநம் செய்வித்தல் வேண்டும்.

நல்ல பரிமளமுள்ள நெல்லிக்கனி முதலானவை களால் ஸ்நாநமானது அவ்விடத்தில் விதிக்கப் படுகி றது.

பீடத்தோடு கூடின சிவலிங்கத்தைச் சந்தன ஜல த்தால் அபிஷேகத்தைச் செய்து முகங்களில் ஆசமநத் தைக் கொடுத்து பரிசுத்த வஸ்த்ரத்தால் துடைத்தல் வேண்டும்.

அலங்கார நைவேத்யம்.

பின் வேதிகையோடு கூடிய சிவலிங்கத்தைப் பரி மள த்ரவ்யங்களாற் பூசி வெளுப்பான வஸ்திரங்களா லும் அநேகவித த்ரவ்யங்களாலும் மறைத்து அத்தே வரின் பொருட்டு எட்டுவித புஷ்பத்தைக் கொடுத்து பிறகு மந்திரத்தோடுகூடிய அவிசைக் கொடுத்தல்வே ண்டும்.

பயற்றம் பருப்புப் பொங்கலாவது சுத்தான்ன மாவது வ்யஞ்சன முதலானவைகளோடு கொடுத்தல் வேண்டும்.

பரிசுத்தமான புஷ்பமாலைகளாலும் கிள்ளு பத்தி ரங்களாலும் பூஜித்தல் வேண்டும்.

பொன் பட்டங்களோடு கூடிய க்ரீடங்கள் பொன் னலாகிய பத்ரங்கள் பொன் அறுகுமுளைகள் லக்ஷ் மியி னுருவமமைந்த ஸ்வர்ணபுஷ்பங்கள் அர்த்தசந்தி ர வடிவமைந்த பொன்னுபரணம் அநேக ஸ்வர்ணபுஷ் பம் என்பவைகளால் அலங்கரித்தல் வேண்டும்.

ஆசிரியரானவர் மூன்று சரத்தை யுடைய யஞ் ஞோபவீதம் அநாண் பொற்றொடை ஸ்வர்ணவஸ் திரம க்ரீடம் புஷ்பம் பொற்கோளம் பலவித ரத்நங் கள் முதலிய வற்றுல் ஞாயப்படி அலங்கரித்தல் வேண் டும்.

| | |
|---|---|
| ஆதிவாரம் | மாணிக்கம் |
| சோமவாரம் | முத்து |
| மங்களவாரம் | பவழம் |
| புதவாரம் | மரகதம் |
| குருவாரம் | புஷ்பராகம |
| சுக்ரவாரம் | வஜ்ரம் |
| சனிவாரம் | இந்திரநீலம் |

இவ்வாறு சமஸ்தமும் அவ்வவ் வாரங்களிற்குத் தக்கபடியுபயோகிக்கத் தக்கது. ஆபரணங்களின் விதி இந்தப்படிச் சம்மதிக்கப் பட்டது.

பிண்டிகையின் ரூபமான தேவியை அந்தச் சிவந் துடன் ஸ்மரித்துக்கொண்டு ஸ்நாநஞ் செய்வித்தல்வே ண்டும்.

சத்யோஜாத மந்திரத்தால் பாதங்களில் பாத்யத் தையும் சிரோமந்திர முதலானவைகளால் முகங்களில் ஆசமநமுடிவில் சிரசில் அர்க்யத்தையும் கொடுத்தல் வேண்டும்.

பஞ்சகவ்ய முதலான அபிஷேக சமயத்தில் பெ ருத்த மணியி னோசையோடு கூடினதாயும் உபஸ்காக த்தோடுகூடினதாயும் தூபத்தைநிவேதிக்க. ஒவ்வோர் முறையும் முக்யமாய் உபஸ்நாநமானது தூபத்தோடு கூடினதா யிருத்தல் வேண்டும்.

உபசாரம்.

யாதொருமந்த்ர சம்பந்தமான வேதசந்த ஸ்வரூ பமான கானம் வீணாகானம் வேதாத் யயநம் சாஸ்திர பாட முதலான கானம் செய்விக்க. பின் கௌடபா ஷை முதலானவைகளால் கானத்தைத் தூபமுடிவு வ ரையில் அநுஷ்டிக்க. மேல் தமிழ்ப்பாஷையி னங்கமா ன கானம் ந்ருத்தத்தோடு கூடினதாகவும்,அநேக ஸ்வர ங்களோடு கூடின ஸமஸ்திருத பாஷா கானம் பதினெ ண்பாஷா கானங்கள் இவைகளைச் செய்தல் வேண்டும்.

அநேக தேசபேத நாட்டியங்களைச் செய்து புஷ் பமாலை முதலானவைகளால் நாலு பக்கத்திலும் தொ ங்கவிட்டு அலங்கரித்தல் வேண்டும்.

பின்பு புகையில்லாம லெரிகிற நெருப்பினல் நி றைந்த பாத்திரத்தின் மத்திபில் தூபத்தால் தூபமிட ல்வேண்டும். நல்ல ரூபமும் கம்பீர ஓசையுமுடைய ம ணியை இடது கையினல் வாத்யஞ் செய்துகொண்டு எ ப்பொழுதும் அஸ்திரமந்திரத்தாற் போடப்பட்ட தூ பத்தை உயர வெடித்தல்வேண்டும்.

காரம் பசுவின் நெய்யினல் நிறைந்ததாயும் கம்

பூரம் அகரு இவைகளோடு கூடின வர்த்திகளையுடைய தாயும் அவியாத் தீபங்களை யுடையதாயும் விருத்தாகார தோரணத்தை முனபாக வுடையதாயும் திரிசூலாகிருதியாகிய தீபங்களை யுடையதாயு மிருக்கிற தீபமாலைகளாலும் மற்றும் அநேகவித தீபங்களாலும் நான்கு பக்கத்திலும் ப்ரகாசிப்பித்தல் வேண்டும்.

கோதானம் திலதானம் ஸ்வர்ணதானம் பசுக்கட்குப் புல்முதலான தானம் இவைகளை லோகோபசாரமாகச் செய்தல் வேண்டும்.

பிறகு பெரிதாயும் எண்ணெயால் நிறைந்ததுகளாயும் அவியாததுகளாயும் நல்ல வர்த்தியால் தூண்டப்பட்டிருக்கிறதாயு முள்ள ப்ரகாசிக்கிற தீபங்களால் ஆராத்திரிகத்தைச் செய்யவேண்டும்.

எப்படி அவயவமானது விபூதியால் பூசப்படுமோ அவ்விதமாய்த் திலகவடிவமாயும் திரிபுண்டர வடிவமாயும் பூசி, பிறகு தூபதீப நைவேத்ய பலியிடுதல்களின் மத்தியில் ஓர்முறை யாசமனத்தைக் கொடுத்து அருகில் நின்று நமஸ்கரித்துப் பின் செய்யவேண்டும் காரியமானது செய்யத்தக்கது.

ஆவரணபூஜை.

அடையப்பட்ட ஆஞ்ஞை யுடையவனுய் வெளியில் ஆவரணத்தைப் பூஜித்தல்வேண்டும்.

| | |
|---|---|
| கர்ணிகையில் | ஈசான மூர்த்தியைப் புஷ்ப முதலானவைகளாற் பூஜித்தல்வேண்டும். |
| கிழக்குதழில் | தத்புருஷ மூர்த்தியையும் |
| தெற்குதழில் | அகோரமூர்த்தியையும் |
| வடக்குதழில் | வாமமூர்த்தியையும் (ம் |
| மேற்குதழில் | சத்யோஜாத மூர்த்தியையு |

இவ்விதமாய் ஐந்திதழ்களையும் ஐந்துமுகங்களோடு கூடியதாய் விசுவசித்தல்வேண்டும்.

பத்துக் கைகளோடும் சந்திர கிரீடங்களோடும கூடிச் சிறந்த ஆயுதங்களையும் தரித்திருக்கிற சதாசிவஸ்வரூபங்களை த்யாகிக்கத் தக்கது.

| | |
|---|---|
| ஆக்நேயம் | இருதயம் |
| ஈசாந்யம் | சிரோ |
| நிருதி | சிகா |
| வாயு | கவசம் |

என்று நான்கு திக்குகளிலும் நேத்ர அஸ்த்ர மந்திரங்களை க்ரமந் தவறுமலும் பூஜித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| இருதயம் | சந்த்ரவர்ணம் |
| சிரா | கோரோசனை நிறம் |
| சிகா | மின்னல் நிறம் |
| வசம் | காலுபக்கமும் சூழ்ந்த புகைநிறம் |
| ஸ்த்ரம் | கபிலநிற மென்றும் த்யாநித்தல் வேண்டும். |

இதயத்தில் உள்ள நேத்ர மந்திரத்தைச் சோதிரூபமாக த்யாநித்தல்வேண்டும்

இம்மந்திர தேவர்களெல்லோரும் ஐந்து முகங்களும் பத்துக் கைகளு முடையவர்கள். சந்திரனலும் ஆபரணங்களாலும் அநேக மாலைகளாலும் சந்தனத்தாலு மலங்கரிக்கப் பட்டவர்கள். பிரிதொரு வயதையும் நல்லரூபத்தையும் தளராத யௌவனத்தையும் நிர்மலமான முகத்தையும் சாந்தத்தையும் மூன்று நேத்திரத்தையும் ஸ்வஸ்திகாசனத்தையு முடையவர்கள்.

இவர்கள் பரமசிவத்தின் சிரோமந்திரம் இருதயமந்திர முதலானவைகளால் வரவழைக்கத் தக்கவர்கள்.

இவர்களை இவ்வாறு பூஜிக்காவிடின் ஆசிரியர் ஈசானதிக்கில் நேத்ரமந்திர ஸ்வரூபமான ஈசானமந்திரத்தைப் பூஜித்தல்வேண்டும்.

இவ்வாறு பரமசிவத்திற்கு நான்கு பக்கத்திலும் கர்ப்பக்ரஹ ப்ராகாரத்தைப் பூஜித்தல்வேண்டும்.

அவ்வாறன்றி இவ்விடத்தில் வாமமுதலான ஒன்பது சத்திகள் பூஜிக்கத் தக்கவர்கள்.

பரமசிவத்தின் மடியில் வீற்றிருக்கும் மனோன்மனியென்னும் ஆதிசத்தியானது பூஜிக்கத்தக்கது.

இந்த ஆவாஹனமுதலிய சமஸ்தங்களையும் தந்த்ர மந்த்ரங்களால் முறையாகப் பூஜித்தல் வேண்டும். இவைகட்கு அம்ருதீகரண மில்லாமல் அவகுண்டன மில்லை. இவ் வாறுவித சமஸ்காரமே பண்டிதர்களால் வெவ்வேறுக ஏற்பாடி செய்யப்பட்டது.

ஸ்நபனமும் தீபங்களி னேற்பாடும் அங்கபாவத்தைக் காட்டுவது; வேறன்று.

உ—ஆவரணபூஜை.

இரண்டா மாவரணத்தில் அநந்தாதி வித்யேசுவர்கள் முறையாகப் பூஜிக்கத் தக்கவர்கள். அநந்தர் சூக்ஷ்மர் சிவோத்தமர் ஏகநேத்ரர் ஏகருத்ரர் த்ரிமூர்த்தி ச்ரீகண்டர் சிகண்டிகர் இந்த தேவர்கள் நான்கு முகமுள்ளவர்கள் பரமசிவம்போற் பத்து புஜங்களை யுடையவர்கள். அர்த்தசந்த்ரனைச் சிரசி லுடையவர்கள். சாந்தர்கள் தாமரச புஷ்பத்தி லிருப்பவர்கள். நாநாவித ஆயுதங்களை யுடையவர்கள். கத்தி கேடயம் வில் பாணம் கமண்டலம் ஜபமாலை சூலம் தாமரச புஷ்பம் பூணூல் இவைகளை யுடையவர்கள். வரதாபயக் கைகளை யுடையவர்கள். யுகாந்த சூரியனுக்குச் சமான மானவர்கள். சிருஷ்டியில் பரமசிவத்தா லேவப்பட்டவர்கள்.

இவர்களில்

| | |
|---|---|
| கிழக்கு | அநந்தர் |
| தெற்கு | சூக்ஷ்மர் |
| மேற்கு | சிவோத்தமர் |
| வடக்கு | ஏகநேத்ரர் |
| ஈசானம் | ஏகருத்ரர் |
| ஆக்நேயம் | த்ரிமூர்த்தி |
| நிருதி | ஸ்ரீகண்டர் |
| வாயு | சிகண்டி |

என்னுந் திக்குகளில் பூஜிக்கத்தக்கவர்கள்.

ஊ—ஆவரணபூஜை.

இனி மூன்று மாவரணத்தில் ப்ரமத கணேசர்கள் குபேர திக்குமுதல் வரிசையாய்ப் பூஜிக்கத் தக்கவர்கள்.

வடக்கில் சிங்கவாகனத்தின் மேலிருப்பவள் மூக்கண்ணினள் மஞ்சள் நிறத்தினள்

கண்ணுடையை உத்வஹித்தவள் என்னு மூமையவளைப் பூஜிக்க.

ஈசாநத்தில் சுத்தவைடூர்ய நிறம் உக்ரப்பார்வை புலித்தோலாசனம் மூன்று கண்கள் சூலதண்டகோடாலி என்னு மாயுதம் வரதாபயம் அர்த்த சந்த்ர சர்ப்பாபரணலங்காரம் என்னு மிவைகளையுடைய சண்டேசரைப் பூஜிக்க.

கிழக்கில் பத்மராகத்திற் கொப்பான காந்தி முக்கண் சூலக்கை சாந்தம் நாகயஞ்ஞோபவீதம் என்பவைகளையுடைய நந்தியைப் பூஜிக்க.

ஆக்நேயத்தில் பச்சை நிறம் சூலக்கை முக்கண் நாகயஞ்ஞோபவீதம்ருத்ர சம்பந்தமாயுள்ள மஹாகாளரைப் பூஜிக்க.

தெற்கில் குள்ளவுருவம் யானைமுகம் தன்னுடைய தந்தத்தைப் பிடித்தகை கும்பச்சிரம் முறம்போன்ற காது மூன்று ஒட்டைச்சான் துதிக்கை லட்டு பசுவனம் கோடாலி ஜபமாலைகளையுடைய கைகள் முக்கண் தாமரைப் பூவின்நிறம் இவைகளையுடைய விநாயகரைப் பூஜிக்க.

தென்மேற்கில் சூலபவடிவம் மூக்கண் குருக்கத்தி சந்திரன் பனிபோன்ற காந்தி சமஸ்த பூதாதாரம் தர்மாத்ம வடிவம் என்னு மிவைகளையுடைய இடபதேவரைப் பூஜிக்க.

மேற்கில் மாமச மில்லாத சரீரமும் வெண்ணிறமும் உள்ள ப்ருங்கியைப் பூஜிக்க.

வாயுவில் ஆறுமுகம் இளமைப் பருவம் பன்னிரண்டி கண்கள் பன்னிரண்டி கைகள் சத்தி மணி கேடயம் தாமரைப்பூ பல்லயம் கோழி தண்டம் வரம் அபயம் வில் பாணம் பெரிய கோடாலி என்னு மிவைகளையுடைய சுப்ரமண்யரை, சம்பத்தின்பொருட்டி ஒரு முகத்துடன் நான்கு கைகள் அல்லது இரண்டு கைகளையுடையவராகவாவது பூஜிக்க. சத்தி கோழி வரம் அபயம் பவளநிறம் என்னு மிவைகளையுடைய சுப்ரமண்யர் பலாபேக்ஷிகளால் வாயுதிக்கிலேயே பூஜிக்கத் தக்கவர்.

இவ்வாறன்றி வேறுவிதமாயும் கணேஸ்வரர்கள் பூஜிக்கத் தக்கவர்கள்.

தேவி சண்டேசர் மஹாகாளர் இடபம் நந்திகேசர் கணேசர் ப்ருங்கி சுப்ரமண்யர் என்னு மிவர்களைப் பத்மராகத்தோடி சமானமான காந்தியையுடையவர்களாகத் துக்கமற்றுப் பூஜிக்க.

ச—ஆவரணம்.

நான்கா மாவரணத்தில் தத்தம் திக்குகளையடைந்திருக்கிற திக்குப் பாலர்களை முறையே பூஜித்தல் வேண்டும்.

கீழ்ப்பாகத்தில் ஐராவத வாகனம் மஞ்சள்நிறம் வஜ்ராயுதம் ஆயிரங் கண்கள் என்னு மிவைகளையுடைய தேவேந்திரனைப் பூஜிக்க.

தென்கிழக்கில் ஒளி வீசுகிற மாலை சத்தியாயுதம் ஆட்டுக்கடா வாகனம் என்னு மிவைகளையுடைய அக்நிதேவனைப் பூஜிக்க.

தெற்கில் எருமைக்கடா வாகனம் கறுத்தநிறம் கையிற் தண்டம் என்னு மிவைகளையுடைய யமனைப் பூஜிக்க.

தென்மேற்கில் கறுத்தநிறம் கையிற்கதை நரவாகனம் (பல்லக்கு) என்னு மிவைகளையுடைய நிருதியைப் பூஜிக்க.

மேற்கில் வெண்ணிறம்முத்தலை நாகம் கையிற் பாசம் என்னு மிவைகளையுடைய வருணனைப் பூஜிக்க.

வாயுதிக்கில் சித்ரவர்ணம் கையில் த்வஜம் மான்வாகனம் இவைகளையுடைய வாயுவைப் பூஜிக்க.

வடக்கில் மஞ்சள்வர்ணம் கையிற் கத்தி குதிரைவாகனம் என்னுமிவைகளையுடைய குபேரனைப் பூஜிக்க.

ஈசானத்தில் கோரோசனை வர்ணம் கையிற் சூலம் ருஷப வாகனம் முக்கண் தெளிவான திருமுகம் சந்தோஷப் பார்வை என்னுமிவைகளையுடைய ஈசானமூர்த்தியைப் பூஜிக்க. புத்திமான்

பூமியையடைந்து கறுத்த நிறம் கருடவாகனம்கையிற் சக்ரம் என்னு மிவைகளையுடைய திருமாலையும்

மேலே சிவந்த நிறம் அன்னவாகனம் கையிற் ருமரையுமுடை ப்ரம்மாவையும் தத்தம் நாமாக்கரங்களாற் பூஜிக்க.

ஞ—ஆவரணம்.

ஐந்தா மாவரணத்தில் அஸ்திர சமூஹங்களைச் சாத்திரப்படிப் பூஜிக்க.

கிழக்கில் மஞ்சள்நிறம் அறுகோண வஜ்ராயுதம்

அக்நியில் அதிக சிவப்புள்ள சத்தி

தெற்கில் கறுத்ததண்டம்

தென்மேற்கில் கறுத்த கத்தி

மேற்கில் வெளுத்தபாசம்

வாயுவில் சித்ர த்வஜம்

வடக்கில் பொன்னிற கதை

ஈசானத்தில் ப்ரகாசிக்கிற சூலம்

அடியில் சூரியனைப் போன்ற சக்ரம்

மேலே வெண்டாமரைப்பூ

என்பவைகளை முறையே பூஜிக்க.

இவ்வாறு ஐந்தா மாவரண பூஜை சுருக்கமாகச் சொல்லப்பட்டது.

க—ஆவரணம்.

முதலாவரணமானது அங்கமந்திரம் பஞ்சப்ரம்மமந்திரம் அவ்வாறன்றித்தனியே அங்கமந்திரம் அல்லது தனியே பஞ்சப்ரம்ம மந்திரம் அல்லது பஞ்சப்ரம்மாங்க மென்னு மிரண்டுஞ் சேர்ந்த மந்திரம் எவைகளாலும், லோகபாலர்கள் ஆயுதங்கள் என்னு மூன்றுஞ்சேர்ந்த ஆவரணங்களாலும் பூஜிக்க. திக்பாலகர்களை ஆயுதங்களுடன் பூஜிக்க. பின் பஞ்சப்ரம்ம மந்திரம் அங்கமந்திரம் அஷ்டவித்யேசர் ஏகாதசருத்ரர் என இவ்வாறு சந்தனமுதலான வஸ்துக்களால் ஆவரண க்ரமமாய்ப் பூஜிக்க.

வெளிஆவரண பூஜையைப் பரிவார தேவதையின் பூஜாவிதியிலறிகிறார்கள்.

இவ்வாறு ஆவரணத்தைப் பூஜித்துச் சிறந்த நைவேத்யத்தைக் கொடுத்தல் வேண்டும்.

நைவேத்யம்.

நைவேத்யம் ஐந்துமுகங்களிலும் கொடுத்தல்வேண்டும்.அவ்வாறன்றி மேல்முகத்திலும் கொடுக்கலாம்.

மறுபடி ஸமஸ்த அங்கங்களுக்கும் வேறுன நைவேத்யம் முன்னிற் பாகியளவாகும்.

ப்ரத்யேக பாத்ரங்கள் கிடைத்திருந்தால் அவிசைத் தனித்தனி பாகஞ்செய்தல் வேண்டும். அவ்வாறு ப்ரத்யேக பாத்ரங்களில்லாவிடின் பரிசுத்தமான ஓர்பாத்திரத்தில் சமைத்த அன்னத்தை மந்திரத்தால் தனித்தனியே வைத்தல் வேண்டும்.

த்வாரபாலகர்முதல் வெளி ஆவரணத்திலிருக்கிற தேவதைகட்கு, சந்தன புஷ்பமுதலான வைகளால் பூஜிப்பதானது வெவ்வேறுக விதிக்கப் படுகிறது.

பலிஹோம தாம்பூலம்.

பூதமுதலான கணங்களின் பொருட்டு பலியைக் கொடுத்தல் வேண்டும். பிறகு மந்திர பூர்வமான நைவேத்யம் கொடுத்தல் வேண்டும். அதன்முடிவில் மறுபடியும் உள்ளாவரணத்தைப் பிரவேசித்து நித்ய ஓமம் செய்தல் வேண்டும்.பிறகு திருப்தியடைந்த பொழுது ஹஸ்த ப்ரக்ஷாளன பூர்வமாய் ஆசமனத்தைக் கொடுத்துத் தேவர்கட்குத் தருதியு முகப்பழக்கமுமான தாம்பூலத்தைக் கொடுத்தல்வேண்டும்.

உபசாரம்.

அப்பொழுது ஸ்ரீமத் பஞ்சமஹா சப்தம் கண்ணாடி கொடை விசிறி வெண்சாமரங்களாலும் பாட்டு நாட்யம் ஜப தோத்திரங்களாலும் அந்தச் சிவபெருமானை சந்தோஷிப்பித்தல் வேண்டும்.

பவித்திரம்.

சந்தோஷ முள்ள உமையவளோடு வீற்றிருப்பவராயும் சத்தி ஸ்வரூபராயுமுள்ள சதாசிவரை த்யானித்து அவர்சிரசில் கருமங்களைப் பூர்த்திசெய்வதான பவித்ரத்தைச் சாற்றல் வேண்டும்.

எந்தக்காரணத்தால் நாடோறும் மனோவாக்குக் காயங்களாலுண்டாகிற பாவத்தினால் விழுகின்ற நரகத்தினின்றும் காப்பாற்றுகிறதோ அந்தக் காரணத்தால் பவித்திர மென்னும் பெயரை யுடையது.

ப்ராசாத மந்திரோச் சாரணம்.

யாவும் சம்பூரணமாகும் பொருட்டு முதலிற் சகத்திற்கு முடிவான பரமீகரணத்தையுச்சரித்துப் பிறகு ப்ராசாத மந்திரத்தை முன்போல் ந்யாசஞ் செய்தல் வேண்டும்.

ஜபம்.

புத்திமானனவன் முன்னமே ஸ்வீகரிக்கப் பட்ட மூத்திரையால் இன்னது இன்னபிரயோஜனம் கொடுத்தல்வேண்டுமென்று ப்ரார்த்தித்து ஜபமாலையால் ஜபித்தல் வேண்டும்.

யாதுகாரணத்தால் ருத்ர நேத்ரங்கட் கொப்பாயிய ருத்ராக்ஷங்களுக்குக் கட்டுக் கட்டப்படுகிறதோ அந்தக் காரணத்தாலும் காணப்பட்டதும் காணப்படாததுமான பலனையடைவிப்பதாலும் ருத்ராக்ஷ ஜபமாலையென்று சொல்லப் படுகிறது.சிவதீர்த்தத்தால் நன்முகச் சுத்திசெய்யப்பட்ட அந்த ஜபமாலை நூற்றெட்டு அல்லது ஐம்பத்து நான்கு அல்லது இருபத்தேழானாலும் செய்யத் தக்கது.

நடுவிரல் பவித்திரவிரல் பெருவிரலினைகளால் நடத்துவதால் உத்தமசித்தியும் பெருவிரல் சுட்டுவிரலால் நடத்துவதால் மத்திம சித்தியும் சிறுவிரல் பெருவிரல் சம்பந்தத்தால் அதமசித்தியும் கொடுப்பதற்கு இச்சிக்கப் படுகிறது.

இந்தஜபவிஷயத்தில் புத்திமானால் மூலமந்திரத்திற் பத்திலொரு பங்கு பஞ்சப்ரம்மாங்க மந்திரங்கட்குச் செய்யத்தக்கது.

வித்வானனவன் ஆலச்யம் விபரமின்மை ஒருவரிடத்திருந்தும் நேரேயடையாமை சிக்ரமின்மை மனப்ராந்தியால் கணக்கிடப்படாமை எனனும் ஜபத்தை நித்யகர்ம முதலிய சகல கர்மங்களினும் செய்யப்படாது.

நித்யகர்ம முதலிய கர்மபேதத்தாற் சொல்லப்பட்ட ஜபத்தைச்செய்து நிவேதனம் செய்தல்வேண்டும்.

ப்ரார்த்தனை.

ஆசிரியரானவர் சாதிக்கத்தக்க காரியத்தின் முடிவிற் காகவும் மற்றஜன விருத்திக்காகவும் மூன்றுள்ளங்கை ஜலத்தினால் புஷ்ப தர்ப்பமுதலானவற்றோடு ஓ ரகஸ்யம் அதிரகஸ்ய மென்னு மவற்றை ரக்ஷிப்பவராகிய சிவபெருமானே! தேவரீர் எங்களாற் செய்யப்பட்ட ஜபத்தை க்ரஹித்தல்வேண்டும். எந்தக் காரணத்தால் நீரிருக்கும்போது உம்முடைய அநுக்ரஹத்தால் எமக்குச் சித்தியான துண்டாகும்.

ஓ சிவபெருமானே! மோக்ஷானந்த சுகத்தைச் செய்பவரே! எப்பொழுதும் நல்லொழுக்கம் தீயொழுக்கமாகியகருமம் யாதேனுமிருக்குமாகில் பரமசிவத்தின் பாதத்திலிருக்கும் என்னுடைய நல்லொழுக்கத்தினை அநுபவியும், தீயொழுக்கத்தைப்போக்கிவிடும்; என்று பிரார்த்திக்க.

சிவன் கொடுப்பவர் சிவன்புசிப்பவர் சிவனில்வுலகம் சிவனெல்லாவிடத்தும் யாகம்செய்பவர் சிவனேநான்.

இவ்வாறு தனதுஆன்மாவையும் ஜபத்தையும் பூஜையையும் பக்தியுடன் பரமசிவத்தின் சந்நிதானத்திற் தெரிவித்து, பிறகு எவ்வாறு முன்னஞ்சொல்லப்பட்டதோ அவ்வாறே சிவனைத் தியானித் திருத்தல் வேண்டும்.

அநேகவித தோத்திரங்களாலடிக்கடி தோத்திரம்செய்து நமஸ்கரித்து ஓமம் செய்கிற கிரஹத்தில் நித்திய சிவாக்நியில் நித்தியமாகிய அக்நிகார்யத்தைச் செய்தல் வேண்டும்.

நித்திய ஹோமம்.

பாகசாலையினுக்நேயகுண்டத்தில் அக்நிகார்யமானது வரிசையாகச் செய்யத்தக்கது.

உத்சவம்.

நித்யோத்சவத்தையும் அதன்பிறகு தாண்டவோத்சவத்தையும் செய்தல்வேண்டும்.

பிறகு சிவலிங்கத்தை யர்ச்சித்துச் சந்தனம்புஷ்ப முதலானவைகளால் வரிசையாய் மேற்கு முகார்க்கயத்தைக் கொடுத்து மஹாமுத்திரையும் கரண்பித்தல்வேண்டும்.

அஸ்திரமந்திரத்தால் சங்காரமுத்திரைகாட்டி ஆவரணங்களிலிருந்து தேவர்களையெழுப்பி மூர்த்திமந்திரத்தால் அவ்வமூர்த்திகளை யடைந்தவர்களாகச் செய்தல் வேண்டும்.

தியாநம்.

சாதகரஹிதமாயும் சகளோபாதியிலிருந்து விடப்பட்டதாயும் எவ்வாறு நிஷ்களத்தை யடைந்திருக்குமோ அவ்வாறே இருதயமந்திரத்தை யநுசரித்திருக்கிற மூலமந்திரத்தை யுச்சரித்து இருதயத்திற் சிவத்துடன் பேதமற்றிருப்பதாய் த்யாநித்தல் வேண்டும்.

சிவலிங்க பூஜாவிஷயத்தில் பலன்களை விரும்பாது இவ்வேற்பாடு செய்வது சாதாரணமாய் ஸர்வஜன லம்மதம்.

தன்னுல் க்ரஹிக்கப்பட்ட லிங்கத்தின் பலன்களை முன்னரே கூறப்பட்டது. சலலிங்கத்திலும் பலன்களை யபேக்ஷிக்கலாம். ம்ருத் லிங்கத்தில் பலன்களை யெப்போது மபேக்ஷிக்கலாகாது. எவ்விதலிங்கமேனும் பலன்களை யபேக்ஷியாது பூஜித்தலே விசேஷமாக விதிக்கப்படுகிறது.

சண்டேச பூஜை.

ஈசாநத்தில் சண்டேசரை சந்தனபுஷ்ப முதலானவைகளால் வரிசையாய்ப் பூஜித்தல் வேண்டும். அவர் பொருட்டுச் சகலமும் சமர்ப்பித்தல் வேண்டும். அவை நிர்மால்யமென்று கூறப்படுகின்றது.

சண்டேசரைச் சிலர் சிவலிங்கத்தின் சிரசிலிருப்பவரென்றும் மற்றவர்கள் பிண்டிகையி லிருப்பவரென்றும் அவ்வாறன்றி ஈசாந்யதிக்கில் பீடத்திலிருப்பவரென்றும் வெளியி லிருப்பவரென்றும் அவ்வாறன்றி சண்டகிரஹத்தி லிருப்பவரென்றும் கூறுவர். பரமசிவத்தின் கோபாம்சம் சண்டேசரென்று கூறப்பட்டது.

நிர்மால்யம்.

நைவேத்யம் சந்தன புஷ்ப முதலாகிய நீடித்தகாலமாயுள்ள பொருள் அநுபவிக்கப்பட்ட மாலை இவைகள் நிர்மால்ய மென்று கூறப்படும்.

ம்ருத்மயமான லிங்கத்திலிருக்கிற தூளியும் சிவபெருமானைப் புசித்து விடப்பட்ட யாதொரு வஸ்துவோ சண்டேசரால்புசிக்கத்தக்கதாவதனையும் யாவரும் விரும்பத்தக்க தன்று. இதனை முயற்சியுடன் விடத்தக்கது.

மண்டபாதிகளின்மேல் கட்டுகிற விதாநம் குடை புஷ்பமாலை இவை முதலாயினவும் வஸ்திரம் ஆபரணம் வாஹனம் இவைகளும் பசு பூமி பொன் வாசமுதலாயினவும் அவ்வஸ்துக்களின் வேறுகிய த்ரவ்யமும் சிவபெருமான் பொருட்டு நிவேதனம் செய்யப்பட்ட தேல்அவையாவும் சிவசொத்தென்று சொல்லப்படும்.

சிவசொத்தாவது சண்டேசர் புசித்த நிர்மால்யமாவது தனது உபயோகத்திற்காக உபயோகித்தல் கூடாது. முற்கூறிய மேற்கட்டி மாலை முதலியவைகளைப் பரிசிப்பதும் தூப வாசனையை மோப்பதும் குற்றமாகா. அவ்வாறே சிவத்தின் தீபங்களைத் தூண்டல் முதலியவும் குற்றமாகாது.

சமாதி

போகாபேக்ஷையின்றிச் சிவலிங்க பூஜையினீங்கி முன்போல் தத்வமந்த்ர சோதனை செய்து ப்ரணவ சொரூபாகார சிவத்தை யோகபீடத்தில் ந்யாசம் செய்து பவித்ர மந்திரங்களால் சகளீகரித்துச் சிவகாயத்ரியா லுபாசித்தல் வேண்டும்.

போகாங்கம்.

பின்பு போகநிமித்தம் சக்தியாநுசாரமாய்ப் புஷ்பமுதலானவைகளா லலங்கரித்து வேதிகையோடு கூடிய சிவலிங்கத்தை எனது குற்றங்களைப் பொறுத்தருள்கவெனப் பிரார்த்தித்தல் வேண்டும்.

அர்க்ய முதலிய பாத்ரங்களை யலம்பிப் பலகைமுதலிய பீடத்தில் வைத்தல்வேண்டும். கர்ப்பக்ரஹத்தை மூன்று பசுவின் சாணத்தி னுண்டையால் மெழுகி அந்தக்ரஹத்திற்கு வெளியில் நிர்மால்ய விசர்ஜந பாத்ரத்தில் சண்டர் புசித்த நிர்மால்யத்தைப் போடல்வேண்டும்.

அபிஷேக தீர்த்தம் பால் தயிர் முதலியவைகள் ஒருவன் நாபிக்குமேலும் கீழும் சிந்தப்பட்டால் ஸ்நாநம் செய்தல் வேண்டும். அல்லது அலம்புதலாவது செய்தல் வேண்டும்.

நழுவுதல் தவறிப்போதல் இவற்றின் சுத்திக்காக அந்தக்கரணசுத்தியுட னைமனஞ்செய்து பரமசிவத்தை நமஸ்கரித்து மந்திரங்களை யுச்சரித்தல் வேண்டும்.

பின்பு யாகசாலையி லிருக்கும் சலலிங்கத்தினும் ம்ருத் லிங்கத்தினும் பூஜையை உபசங்காரம் செய்தல் வேண்டும். இவ்விதம் ந்யாயமேற்பட்டிருக்கிறது.

பசுவின் மூவுண்டைச் சாணத்தாற் கைகால்களைச் சுத்திசெய்து பிறகு விதிப்படி ஆசமநஞ் செய்து பூமியிற் றடிபோல் விழுந்து நமஸ்கரித்து ஸ்வாமீ எனது குற்றங்களைப் பொறுத்தருளல் வேண்டுமெனப் பிரார்த்தித்தல் வேண்டும்.

நான்காவது அர்ச்சன விதிபடல

முற்றிற்று.

சுசுநாமவியி வாரம்ஹ:. — அர்ச்சநாங்கவிதி ஆரம்பம். —

ஸ்லோகம்.

சுசுநாமவியிம்வக்ஷ்யே ஸ்நூயாலக்ஷ்ம
ணவகவுகம் । ஹாக்ஸ்ரொஹ்ய ஸாரஹ்ய
யாவதெ ஹாக்ஸ்ரொஹ்ய: ॥ க

வ - சுசுநாமவியிம் - வக்ஷ்யே - ஸ்நூயாலக்ஷ்ம
ணவகவுகம் - ஹாக்ஸ்ரொஹ்யம் - ஸாரஹ்ய - யாவத்-
தெவ - ஹாக்ஸ்ரொஹ்ய:.

ஸ்லோ - ஸ்வாஸுவஹிகாஸாநொ யாஸ்ரொயம்ஹ
ந்ரிஸ்ரம்யதெ । கஉ

வ - ஸ்வாஸுவஹிகாஸாந: - யாம: - கயம் - ஸம்
யிம: - உச்யதெ -

பதப்பொருள்.

(தத:) பிறகு
சுசுநாமவியிம் அர்ச்சனைக்கு அங்கமானவிதியை
ஸ்நூயாலக்ஷண வகவுகம் சந்தியின் இலக்கண பூர்வமாய்
வக்ஷ்யே சொல்லப் போகின்றேன்.
ஹாக்ஸ்ரொஹ்ய ஸாரஹ்ய சூரியோதயத்திற்கு ஆரம்ப முதல்
ஹாக்ஸ்ரொஹ்ய: சூரியோதயம்
யாவத் எதுவரையிலுமோ
(தாவத்) அது வரை
ஸ்வாஸுவஹிகாஸாந: ஏழரைநாழிகையின் ப்ரமாணமாகிய
கயம் இந்த
யாம: யாமம்
ஸந்தி: சந்தியாக
உச்யதெ சொல்லப் படுகிறது.

தாத்பரியம்.

பிறகு அர்ச்சனைக் கங்கமான விதியைக்கூறுகின்றேன். சூர்யோதய காலத்தில் ஏழரைநாழிகைப்பிரமாணம் சந்தியென்று கூறப்படுகிறது.

ஸ்லோகம்.

ஷஷ்ட்யாஹ்வாஹொஹவெஸ் வ்ராணஷ்ட்
வ்ராணொ வஹிகாஹவெஸ்। வஹிகாஷஷ்ட்ய
வெஸாதிரஷ்டஸ்ரீயம் கஹ்ந்யுதெ॥உ

வ - ஷஷ்ட்யாஹ்வாஹ: - ஹவெஸ் - வ்ராண: - ஷட்
வ்ராண: - வஹிகா - ஹவெஸ். வஹிகாஷஷ்டி - சுவெஸா
திரம் - சுஷ்டஸ்ரீயம் - கஸ் - உச்யதெ.

பதப்பொருள்.

ஷஷ்ட்யாஹ்வாஹ: அறுபது ஸ்வாஸம்
வ்ராண: ப்ராணனாக
ஹவெஸ் ஆகும்.
ஷட் வ்ராண: ஆறு ப்ராணன்
வஹிகா ஒரு நாழிகையாக
ஹவெஸ் ஆகும்.
வஹிகாஷஷ்டி அறுபது நாழிகை
சுவெஸாதிரம் ஒருராப்பகல்.
கஸ் அந்த அஹோராத்திரி
சுஷ்டஸ்ரீயம் எட்டுச் சந்தியை யுடையதாக
உச்யதெ சொல்லப்படுகிறது.

தாத்பரியம்.

சூரிப்போக்த காலஅளவு சந்தியின் ப்ரமாணமாகும்.

ஸ்லோகம்.

சுஷ்டஸ்ரீயாஹம் யா வகஜா ஹாஹ
வெ ஊர்த்வொத்தமா ॥ கூ
சுஷ்டஸ்ரீயாஹம் - யா - வகஜா - ஹாஹவெஸ் -
ஊர்த்வொத்தமா.

பதப்பொருள்.

சுஷ்டஸ்ரீயாஹம் எட்டுச் சந்திகளிலும்
யா எந்த
வகஜா பூஜையோ
ஹா அது
ஊர்த்வொத்தமா லர்வோத்தமமாக
ஹவெஸ் ஆகும்.

தாத்பரியம்.

எட்டுச்சந்திகளிலும் செய்யும் பூஜை சர்வோத்தமமாகும்.

ஸ்லோகம்.

ஸ்வஷ்ட்ஹகுதவெஹாதி யம்ஹ்நொ வ்ர
ஹ்மரெஷ்வ யாஸாலுகாம ஸம்வ்ருதா வகஜா நவவியா ஹவெஸ். ச

வ - ஸ்வஷ்ட்ஹகுதவெஹாதி யம்ஹ்நொ வ்ர
ஹ்மரெஷ்வ - ய - யாஸாலுகாம ஸம்வ்ருதா - வக
ஜா - நவவியா - ஹவெஸ்.

பதப்பொருள்.

ஸ்வ ஏழு
ஷட் ஆறு
ஹகுத ஐந்து
வெஹ நான்கு
தி மூன்று
யம்ஹ் இரண்டு
ந ஒன்று
வ்ரஹ்மரெஷ்வ இந்த யாமங்களின்
யாஸாலுகாம மூவஹர்த்த காலத்தில் முடிந்திரு
ஸம்வ்ருதா க்கிற
வகஜா பூஜையானது
நவவியா ஒன்பது விதமாக
ஹவெஸ் ஆகும்

தாத்பரியம்.

ஒன்றுமுதல் ஏழுவரையுள்ள முகூர்த்தகாலங்களின் பூஜை ஒன்பதுவிதமாகு மென்பது.

ஸ்லோகம்.

வகஜாரம்ஹாதி-ந்ரிதாதகுயர்

சுவஸ்ரூபவஹாநகழி । வஜ்ரூபாகிக்ரஉணா
ஔஷொ நயஞநாயாம தஂந ஷொஷ
ஹாகீ ॥ ரு

வ - வஞஜாஊஹாஸ் - தஂ - நஜ்ஞீாஹம் - கஂ
யஃாஸ் - வஜ்ரூபவஹாநகம் - வஜ்ரூபாகிக்ரஉணாஸ் -
ஷொஷஃ - நயஞநாயாம் - தஂ - ந - ஷொஷஹாகீ.

பதப்பொருள்.

| | |
|---|---|
| வஜ்ரூபவஹாந கஂ | சந்தியின் முடிவுவரையில் |
| வஞஜாஊஹாஸ் | பூஜை ஆரம்பத்திலிருந்து |
| நஜ்ஞீாஹம் | நிருத்தநம்முடிவாக |
| கஂயஃாஸ் | செய்தல் வேண்டும் |
| வஜ்ரூபாகிக்ரஉணாஸ் | சந்தியை யதிக்கிரமிப்பதாலே |
| ஷொஷஃ | குற்றமாகும். |
| நயஞநாயாம | (உட்பட்டால்) குறைந்திருந்தால் |
| நஷொஷஹாகீ | தோஷத்தை அடைகிறதில்லை. |

தாத்பரியம்.

பூஜாரம்பமுதல் நிருத்தனமுடிவாகச் சந்தியாகாலத்திற் செய்தல் வேண்டும். சந்தியை யதிக்கிரமிப்பதாற் குற்றமுண்டாகும், சந்தியாகாலத்திற்குள்ளாலுற் குற்றமில்லை.

ஸ்லோகழி.

மஂஊவசஹாஊ வஞஜாயாம வியிஊ
ஷஃ வ்ருகீகிஃுதஃ । ரூஉ

வ - மஂஊவசஹாஊ வஞஜாயாம - வியிஃ - வ
ஷஃ - வ்ருகீகிஃுதஃ -

பதப்பொருள்.

| | |
|---|---|
| மஂஊவசஹாஊ வஞஜாயாம | பெரிதாகிய உபசார பூஜையில் |
| வஷஃ | இந்த |
| வியிஃ | விதியானது |
| வ்ருகீகிஃுதஃ | சொல்லப்பட்டது. |

தாத்பரியம்.

பெரிதாகிய உபசார பூஜையில் இவ்விதி சொல்லப்பட்டது.

ஸ்லோகழி.

